# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 29ம் நாள் நிறைமதி (15-11-2024 வெள்ளிக்கிழமை) வெளியீடு +94 21 222 9722



கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே
- சம்பந்தர் சுவாமிகள்

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்
திருக்கோணேச்சரம் - இலங்கை

படம் : திருமலை சோதிராசா செந்தூரன் (Shen Vlogs)

உ

திருச்சிற்றம்பலம்

தமிழர்களாகிய நாம்
எங்கள் பிள்ளைகளுக்கு

# தூய தமிழில் பெயர் வைப்போம்

# பெயர் எங்கள் அடையாளம்

பிறந்த நட்சத்திரம் மற்றும்
பிறப்பு எண் அடிப்படையில்
பெயர் தெரிவு செய்ய

**www.peyar.org**

இது ஒரு தென்னாடு முன்னெடுப்பு ஆகும்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.    www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# நயினையம்பதி நாகபூசணி அம்மன் திருக்கோயில்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

இலங்கையில் சத்தி வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றாக நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்மன் திருக்கோயில் விளங்குகின்றது. ஆகம மரபுக்குட்பட்ட முறையில் அமைந்து விளங்கும் இக்கோயில் கருவறைக்குள் நிமிர்ந்து காணப்படும் நாகமும், அதன் கீழ் உள்ள அழகிய பீடத்தில் திருநிலையாகி இருக்கும் அருவுருவ வடிவமான அம்பாளின் திருவுருவும் சுயம்பு ஆகும்.

அம்பாளை அடியவர்கள், நிர்வாகத்தினர் மற்றும் கட்டுரை யாளர்கள் பல மாறுபட்ட எழுத்துகளால் குறிப்பிடுகின்ற னர். நாகபூஷணி, நாகபூசணி, நாகபூசனி, நாகபூடணி என்று பலவகைப்படுகிறது. வரலாறு மற்றும் சொல்பகுப்பாய்வு நோக்கில், நாங்கள் இதனை அணுகி அம்பாளின் பெயரைச் சரியாக, பொருளுடன் தேர்ந்து எடுத்து, அதனைப் பார்வைக்கு உட்படுத்தவேண்டும் என்பது அடியேனின் கருத்து.

வரலாறு கூறும் கதைகளின் படி, நாகம் தினமும் பூ கொணர்ந்து அம்பாளை வழிபட்டது என்று தெரிகிறது. இந்த நாகம் புளியந்தீவில் (அனலைதீவின் ஒரு பகுதி) இருந்து கடலில் நீந்தி வந்து அம்பாளை வழிபட்டதாக கூறப்படுகிறது. இவற்றினை பெயருடன் சேர்த்து பார்ப்போமாயின்,

அணிதல் என்றால் பொதுவாக **"உடுத்தல்"**, **"சூடுதல்"**, **"பூணுதல்"** என்று பொருள் எடுக்கப்படும். அத்துடன் அணி தல் என்பது "ஏற்பது" அல்லது "ஏற்றுக்கொள்வது" என்றும் பொருளாகின்றது. ஆண்மகன் தாலியை அணிவிக்க பெண் அதனை ஏற்றுக்கொண்டாள் என்பது போலாலாகும். அணித லின் வினையடி அணி ஆகும். நாகம் பூசை அணிவிக்க (நாகம் பூ கொண்டு பூசை செய்ய), ஏற்றுக்கொண்டவள் எங் கள் தாய். அடியவரின் பூசையை ஏற்றுக்கொள்பவள் அம் பாள்.

தேவநேயப்பாவாணர் பூசை என்பதை பூசி - பூசுதல் = கழுவுதல் , தெய்வப்படிமையை நீரால் துப்புரவாக்குதல் என்பார். அத்துடன் பூசித்தல் = பூச்சாத்தியும் தேங்காய் பழம் சாற்றி வழிபடுதல் என்று வரும். பூசி - பூசனை, பூசனம் என்பார். இச்சொற்களின் பொருள் வழிபாட்டின் சடங்குளை குறித்து நிற்கும். இறைவன் மீது மலரும் (எழும்) மெய்யன்போடு பூணும் உறுதிப்பாடு அல்லது இறைவனைக் குறித்து எழும் உணர்வு என்பது பூசைக்கு மிக பொருந்தமான வழிபாட்டுச் சொல்லாக விளங்குகின்றது என்பதையும் நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**நாகம் + பூசை + அணி = நாகபூசணி**

என்பது சரியான சொல்லாக, பொருள் விளக்கத்துடன், வரலாற்றுடன் இசைவாக வெளிவரும் தூய தமிழ்ச் சொல். இதனைக் கருத்தில் கொண்டு பிற மொழிக் கலப்புகள் இன்றி நயினைத் தாயை **"நாகபூசணி"** என்று சொல்லும் சொல்லின் பொருளுணர்ந்து சொல்லுவோம். நயினையை நாகேச்சரம் என்றும் கூறுவார்கள். சிவமும் சத்தியும் இரண்டறக்கலந்து அருள் சொரியும் புனித பூமி எங்கள் நயினாதீவு.

அத்துடன் நயினை செல்லும் பத்தர்கள், இயலுமாயின் புளியந்தீவு சென்று பழமையான சிவனையும் வணங்கி வாழ்வில் வளம் பெற வேண்டுகிறேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(17-10-2024) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 31ம் நாள் நிறை மதி அன்று (17-10-2024 வியாழக்கிழமை) ஐம்பதாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழி பாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் தென்னாடு திங்கள் இத ழின் ஐம்பதாவது வெளியீட்டில் சச்சிதானந்தம் ஐயா அவர்களும், துணைவேந்தர் ஐயா அவர்களும் தென்னாடு ஆயிரம் இதழ்களையும் தாண்டி காண வேண்டும் என்று போற்றி வாழ்த்தியதோடு, தென் னாடு இதழின் சிறப்பையும், இவ்விதழ் அச்சு இதழாக தொடர்ந்து வெளிவருவதையும் எடுத்தியம்பி போற்றியி ருந்தனர். இந்நிகழ்வில் துணைவேந்தர் ஐயா அவர்கள் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பதாவது இதழை வெளியிட்டு வைத்திருந்தார்.

(24-10-2024) – அமாரர் சிவத்திரு. கந்தையா பத்மநேசன் அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்வில் அமாரர் சிவத் திரு. கந்தையா பத்மநேசன் அவர்களின் மனைவி மற்றும் பிள்ளைகள் ஆகியோரும் கலந்து வழி பாடாற்றியிருந்தனர்.

(26-10-2024) – தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் அமைக்கும் பணியில், பெரும்பங்களிப்பை வழங்கி வரும், ஒசுத்திரேலியா நாட்டில் வசிக்கின்ற சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களின் அறுபதாவது அகவை நாளை முன்னிட்டு, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் வாழ்த்து காணொளி வெளியீடு செய்யப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

(29-10-2024) – ஐப்பசித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (02-11-2024) – கந்தன் கவினாறு (கந்தசட்டி) நோன்பு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து ஆறு தினங் களாக முருகப்பெருமானுக்கு சிறப்பு அலங்காரங்களுடன் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்று, இறுதி நாள் திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்று சிறப்புப் பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் அடி யார்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(13-11-2024) – ஐப்பசித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞானலிங்கேச்சரப் பெருமானுக்கு சங்கு நீராட்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞானலிங்கேச்சரர் பீடத்தின் 6ம் ஆண்டு, கடவுள் மங்கல தின சங்கு நீராட்டு கடந்த ஐப்பசி 26ம் நாள் (11/11/2024) புரட்டாதி விண்மீனும் பதிற்றிருமைப் (12) பிறைநாளும் கூடிய வேளையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் என அடியார்கள் பலரும் கலந்து திருவருள் பெற்றிருந்தனர்.

திருவருட் சிறப்புக்கள் பல சிறந்து விளங்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், 22-10-2018 அன்று தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களின் திருவருள் துணையுடன் சிந்தையில் உதித்ததன் வண்ணம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சைவமும் தமிழும் நிலைபெற்று நிற்க வேண்டும் என்ற நோக்கத்துடன், திருநிலைப்படுத்தப்பட்ட ஞானலிங்கேச்சரப் பெருமான், இன்று எழில்தரு திருக்கோலத்துடன் அருள்புரிந்து, 6ம் ஆண்டு, கடவுள் மங்கல தின சங்கு நீராட்டையும் கண்டு மகிழ்கிறார். தொடர்ந்து நாமும் எம்பெருமான் போற்றி பரவி வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைப்போமாக.

**திருச்சிற்றம்பலம்**



# இளஞ்சைவ பண்டிதர், சைவபண்டிதர் பரீட்சைகள் 2025



அகில இலங்கை சைவ பண்டிதர் சபை வருடந்தோறும் இளஞ்சைவ பண்டிதர், சைவபண்டிதர்பரீட்சைகளைநடாத்தி வருகிறது. அந்தவகையில் எதிர்வரும் 2025 ஆண்டு நடைபெற இருக்கும் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைகளை 08-08-2025 தொடக்கம் 10-08-2025 வரை நடாத்துவதற்கு சபை திட்டமிட்டுள்ளது. இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30-11-2024 ஆகும். பரீட்சைகள் தமிழ் மொழியும் இலக்கணமும், சைவ சித்தாந்தம், திருமுறைகளும் தோத்திரங்களும், வரலாறு, சைவப் பண்பாடுகள் என்னும் ஐந்து பாடங்களாக நடைபெறும்.

இப்பரீட்சைகளுக்கு நிகழ்நிலை மூலமாகவோ, தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். நிகழ்நிலை விண்ணப்பபடிவம், தபால் மூல விண்ணப்பப்படிவம் என்பவற்றை சைவத் தமிழ் மன்றத்தின் இணையத்தளத்தில் (www.saivatm.org) பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களை தொலைபேசி மூலமாக பெற்றுக்கொள்ள 0752845295 ஃ 0779189919 என்னும் இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம். 2024 ஆண்டு நடைபெற்ற மேற்படி பரீட்சைகளில் மூவர் சைவ பண்டிதர் பரீட்சையிலும் எண்மர் இளஞ்சைவ பண்டிதர் பரீட்சையிலும் சித்திபெற்ற பட்டம்பெறத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

# கனடாவில் தெய்வத்தமிழ் புலவருக்கு சிலை திறப்பு




கனடா தலைநகர் ஒட்டாவாவில் உலகப் பொதுமறை திருக்குறளை உலகத்திற்கு அளித்த பெருந்தகை திருவள்ளுவருக்கு ஒட்டாவா சிவன் திருக்கோயில் வளாகத்தில் சிலை திறந்து வைக்கப்பட்டது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே முக்காலத்திற்கும் பொருந்தவல்ல அறத்தையும் சமய, சமூக நீதியையும், வாழ்வியலின் தத்துவங்களையும் குறுகத்தரித்து ஏழு சொற்களையும் இரண்டே வரிகளையும் கொண்ட குறள்களாக படைக்கவல்ல மெய்ஞானப் புலவராகிய திருவள்ளுவருக்கு கனடாவில் சிலை திறந்திருப்பது போற்றுதலுக்குறியதாகும். இன்றைய தலைமுறையில் ஏராளம் பிரிவுகளும் முரண்பாடுகளும் தலைவிரித்தாடும் சமூகத்தில் ஒட்டாவா தமிழர்கள் பேதமற்று ஒன்றிணைந்து திருவள்ளுவரையும் திருக்குறளையும் கொண்டாடி மகிழ்கின்றமை சிறப்பாகும்.

ஒன்ராறியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் கௌரவ பிரதி அமைச்சருமான கௌரவ விஜய் தணிகாசலம், சமூகத்தின் தலைவர்கள் உட்பட என்போன்ற பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரை-களையும் வழங்கி இருந்தனர். திருக்குறளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்த போப் என்பவர் கனேடியர் என்பதும் குறிப்பிடத்தக்கது!

**திருச்சிற்றம்பலம்**

# இராசராச சோழனின் 1039 ஆவது சதயத் திருநாள் சிறப்புத் திருமஞ்சனம்

திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனத்தின் சார்பாக தஞ்சை பெருவுடையார் திருக்கோயிலில் மும்முடிச் சோழப் பேரரசு திருமுறை கண்ட சிவபாதசேகரன் தஞ்சை இராசராச சோழனின் 1039 ஆவது சதயத் திருநாளில் (ஐப்பசி) 10-11-2024 பெருந்திருமஞ்சனம் இடம்பெற்றது.

திருமுறைச் செப்பேடு கண்டருளிய தருமை ஆதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையில் பெருவுடையாருக்கு பெருந்திருமஞ்சனம் மற்றும் கலசத் திருமஞ்சனம என்பன இடம்பெற்று தொடர்ந்து சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து யானையில் திருமுறைகளை ஏற்றி உலா வருதலும் இடம்பெற்றிருந்தது. மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக வேதசிவாகமங்களின் வழியே, ஞானதானம் செய்து வைக்கும் சைவாச்சாரியர்கள் மட்டுமே சோழப்பேரரசிற்கு முடிசூட்டும் வழக்கம் கொண்டவர்கள் என்பதை நினைவுறுத்தும் வகையில் தருமை ஆதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம் அவர்களினால் இராசராச சோழப் பெருமானுக்கு முடி சூட்டல் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.



நிறைவில் தஞ்சை இராசராசசோழன், இராசராசேச்சரம் வரலாறு மற்றும் திருவிசைப்பா திருப்பதிகம் உரையுடன் பெருவுடையார் திருச்சந்நிதியில் வைத்து சீர்வளர்சீர் குருமணிகள் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**

## 'மார்கழிப் பெருவிழாவை' முன்னிட்டு

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

# திருவாசக பேச்சுப் போட்டி

மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) அன்று நடைபெறவுள்ள 'மார்கழிப் பெருவிழாவை' முன்னிட்டு, சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபையினர், சிவபூமியில் மாணவர்கள் மத்தியில் பேச்சாற்றலை வளர்க்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் திருவாசகப் பேச்சுப் போட்டியினை நடாத்தவுள்ளனர். மேற்படி போட்டியானது இரு பிரிவுகளாக இடம்பெறும்.

### பிரிவு 01

**போட்டியாளர்கள்**

பாடசாலை மற்றும் அறநெறி மாணவர்களுக்கானது (தரம் 6 - 9)

**தலைப்பு**

**"மாயப்பிறப்பறுக்கும் மன்னன்"**

**நேரம்**

6 நிமிடங்கள்

### பிரிவு 02

**போட்டியாளர்கள்**

பாடசாலை மற்றும் அறநெறி மாணவர்களுக்கானது (தரம் 10 - 13)

**தலைப்பு**

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை"**

**நேரம்**

9 நிமிடங்கள்

விண்ணப்பிக்கும் மாணவர்கள், தமது பாடசாலை அதிபர் மூலம் கல்வி கற்கும் தரத்தினை உறுதிப்படுத்தி, தங்களது முழுப்பெயர், பாடசாலையில் பெயர், தரம், தொடர்பு இலக்கம், மின்னஞ்சல் மற்றும் முகவரியை இணைத்து வருகின்ற கார்த்திகைத் திங்கள் 25ம் நாளிற்கு (10-12-2024) முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். முதற்கட்டத் தெரிவு இணைய வழியும், இறுதித் தெரிவு நேர்முகமாகவும் இடம்பெறும். நேர்முகப் போட்டிக்கான இடம், காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**
+94 70 770 1111/ 021 222 9722

### பரிசில்கள் விபரம்

| பிரிவு - 01 | பிரிவு - 02 |
|---|---|
| 1ம் இடம் - 5,000 ரூபாய்கள் | 1ம் இடம் -10,000 ரூபாய்கள் |
| 2ம் இடம் - 3,000 ரூபாய்கள் | 2ம் இடம் - 7,500 ரூபாய்கள் |
| 3ம் இடம் - 2,000 ரூபாய்கள் | 3ம் இடம் - 5,000 ரூபாய்கள் |

போட்டியில் பேச்சின் உள்ளடக்கம், பிறமொழிக் கலப் பின்றிய சொற்பாவனை, திருவசகப் பாடல்களின் மனனம், பொருளுணர்ந்து சொல்லுதல், உச்சரிப்புத் திறன், ஆளுமை, பேச்சின் தொனி போன்ற விடயங்கள் கருத்தில் எடுக்கப்படும்.

இரு பிரிவிலும் மேலும் 7 புத்தகப் பரிசில்கள் வழங்கப் படும். போட்டி முடிவுகள் மார்கழித் திங்கள் 5ம் நாள் (20-12-2024) அன்று அறிவிக்கப்படும். பரிசில்கள் மார்கழிப் பெருவிழாவன்று, யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். போட்டி முடிவுகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தென்னாடு மடம் சார்ந்ததே.

**திருச்சிற்றம்பலம்**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# தமிழ்வேதமாகிய திருக்குறளில் தமிழர் தத்துவம் சைவசித்தாந்தம்

## திருக்குறளில் இறை இயல்பு

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு - குறள் 1**

உலகில் உள்ள எழுத்துக்கள் எல்லாம், ஒலி வடிவாய் உள்ள 'அ' கரம் ஆகிய முதலை உடையனவாகும். அது போல, இந்த உலகம் அனைத்தும் ஆதி பகவன் ஆகிய முதலை உடையது.

இந்தக் குறட்பாவில் வரும் ஆதி பகவன் என்ற தொடர், திருக்களிற்றுப் பாடியாரில் உள்ள,

**அம்மையப்பரே உலகுக்கு அம்மை அப்பர் என்று அறிக்
அம்மை அப்பரிசே வந்து களிப்பர் - அம்மை யப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார் போல் நிற்பார் அவர்"**

என்னும் முதல் வெண்பாவை நினைவுறுத்துகின்றது. இறைவன் தன் நிலையில் சிவமாக நிற்கிறான் இதனையே திருவள்ளுவர் **"பகவன்"** என்கிறார். இறைவன் உயிர்களின் பொருட்டு அருளாகவும் நிற்கிறான் இந்த அருளையே திருவள்ளுவர் **"ஆதி"** என்கிறார், அஃதாவது **"ஆதி"** என்றது உயிர்க்கு உதவும் அருளாற்றலைக் குறிக்கும் **"பகவன்"** என்றது அருளை விட்டு என்றும் பிரியாது, தன் கூறாகக் கொண்டுள்ள இறைவனைக் குறிக்கும்.

**"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்"** என்னும் திருவெம்பாவைக் கருத்தும் இவ்வுண்மையையே பேசுகின்றது, எனவே ஆதி பகவன் என்றது, **"மாதொரு பாகன்"** ஆகிய சிவபெருமானையே குறிக்கும் என்பது பெறப்படும்.

**" அகர முதல எழுத்தெல்லாம்"** என்னும் தொடர்,

**"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து "**

என்னும் திருவருட்பயனை நினைவுறுத்துகின்றது, உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் முதன் முதலில் **'அ'** என்ற இயற்கை ஒலியோடுதான் வாயைத் திறக்கும் என்பது நடைமுறை உண்மை. இவ்வாறு இயல்பாகத் தோன்றும் அகர ஒலியே, மற்றைய எழுத்துக்களுக்கு எல்லாம் முதலாய் அவற்றில் கலந்து இருக்கிறது; தனித்தும் (கடந்தும்) இருக்கிறது. அதுபோலவே உலகத்திற்கெல்லாம் முதலாய், அவற்றோடு கலந்தும் கடந்தும் இறைவன் இருக்கிறான். **'கலந்து இருத்தல்'** என்பது அவற்றின் உள்ளீடாய் இருப்பதைக் குறிக்கும், இஃது எழுத்துக்களின் உள்ளீடாய் அகர ஒலி கலந்து இருப்பதற்கு ஒக்கும், இவ்வாறு கடந்தும் உள்ளும் இருப்பதால்தான் இறைவனைத் தமிழ் மக்கள் **"கடவுள்"** என்னும் தமிழ்ச் சொல்லால் போற்றி மகிழ்கின்றனர்,



செந்நெறிச் செல்வர் அமரர்
சிவத்திரு.கு.வைத்தியநாதன்
திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி
மைய முதல்வர்

இந்த முதற் குறட்பா கடவுள் உண்மையை நிலை நாட்டுவ தோடு, கடவுளின்இயல்பையும்தெளிவுறுத்துகின்றது, திருவள்ளுவர் கடவுளின் சிறப்பு இயல்பை **"எண் குணத்தான்"** என்னும் சிவாகமச் சொல்லால் குறிப்பிடுகிறார். ஒன்பதாவது குறட்பாவில் எண்குணத்தான் என்று சொன்ன திருவள்ளுவர், முதல் எட்டுக் குறட்பாக்களிலும் அந்த எண்குணங்கள் யாவை என்பதை விளக்குகிறார்.

### ஆதி பகவன் - தன் வயம் உடைமை :

உலகம் ஒரு முதல்வனை உடையது என்பது இந்த முதற் குறட் பாவின் கருத்து. அந்த முதல்வன், பிறர் வழிபட்டு நடக்காமல், தான் விரும்பிய செயல்களை விரும்பியவாறே செய்யும் இயல்பு உடையவனாய் இருத்தல் வேண்டும். அப்படி இருந்தால் தான் உலகம் ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு இயங்கும். இந்த இயக்கத்தை முதல்வன் தன் அருளைக் கொண்டு செய்வதால், அவனைத் திருவள்ளுவர் **"ஆதி பகவன்"** என்றருளிச் செய்தார்.

### வாலறிவன் - இயற்கை உணர்வு உடைமை :

இறைவன், பிறரால் அறிவிக்கப்படாமல் தானே எல்லாவற்றையும் அறியும் இயல்வு உடையவன். "வால்" என்னும் சொல் தூய்மையைக் (Purity ) குறிக்கும். வாலறிவு - தூய அறிவு ஆகும். அஃதாவது மலக்கலப்பு இல்லாத அறிவு என்று பெறப்படும். உயிரறிவு மலக் கலப்புடைய அறிவு (Impure). அநாதியே மலக்கலப் பின்றித் தானே இயல்பாகவே எல்லாவற்றையும் உணரும் அறிவுடையன் ஆகலின், இறைவன் இயற்கை உணர் வுடையவன் (வாலறிவன்) எனப்படுகிறான்.

**தொடரும்...**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**இந்து - சைவம் என்னும் சொற்பதங்களில் எதற்கு மங்கலத்தன்மை உண்டு?**

இந்துவென்பது மனிதர் உருவாக்கிய சொற்பதம். எனவே, இது பாசவாக்கியம் எனப்படும். அத்தோடு, அபரம் என்றும் கூறப்படும். ஆனால், சைவசமயம் என்னும் சொற்பதம் சிவபெருமானே சிவாகமங்களில் அருளிய சொற்பதம். சிவபெருமானுக்கு அநாதிசைவன் என்னும் பெயரும் உண்டு. மேலும், "சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என்று திருமூலர்பெருமானும், "சவா போற்றி" என்று மாணிக்கவாசகப்பெருமானும் அருளிச்செய்துள்ளனர். எனவே, சைவசமயம் என்னும் சொற்பதம் பதிவாக்கியம் என்றும், பரவாக்கியம் என்றும் கூறப்படும். பதிவாக்கியமாக விளங்குபவை மந்திரங்களேயாகும். எனவே, சைவசமயம் என்று சொல்லும்போது மந்திரச்சிறப்பும் மங்கலச்சிறப்பும் விளங்கும். அது இந்துவென்ற சொல்லாட்சியால் ஒரு போதும் வாய்க்காது.

**"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" என்பதனால், சிலர் வேதநெறியே இந்துமதம் என்று கூறுகின்றனரே, அது சரியா?**

காமிக ஆகமம் வேதத்திற்கு சிவபரத்துவம் கூறும் நெறிகளே வேதநெறிகள் என்றும் வைதிகநெறிகள் என்றும் வலியுறுத்துகின்றது. வைணவமதம், சுமார்த்தமதம் முதலிய வேதத்தை ஏற்றுக்கொண்ட அனைத்து நெறிகளும் காமிக ஆகமப்படி அவைதிகநெறிகளேயாகும். அதாவது வேதவிரோத நெறிகளேயாகும். ஆனால், ஆய்வாளர்கள் வேதங்களை ஏற்ற சைவம், வைணவம், சுமார்த்தம் முதலிய அனைத்தையும் வைதிகம் என்றும், வேதநெறிகள் என்றும், வேதங்களை ஏற்காத சமண பௌத்தத்தை அவைதிகநெறிகள் என்றும் கூறுவர். ஆனால், சமய நூலில் உள்ளவொன்றுக்கு விளக்கஞ் சொல்லும்போது சமய நூலின் வரம்பில் நின்றே விளக்கஞ் சொல்லுதல் வேண்டும். அவ்வகையில், காபாலிகம் காளாமுகம் வாமம் வயிரவம் சைவம் பாசுபதம் என்று விளங்கிய சிவபரத்துவ நெறிகள் யாவற்றையுமே வேதநெறி என்றும், அதில் சைவசமயத்தையே மிகுசைவத் துறையென்றும் கூறினார் என்றும், **"வைதிகமே சைவம், சைவமே வைதிகம்"** என்னும் காமிக ஆகமவசனத்தால், வேதநெறி என்று இங்கு சுட்டப்பட்டது சைவசமயத்தையே என்றும், அதில் சரியாதி நாற்பாதங்களையுமே மிகு சைவத்துறைகளாகவும் பொருள் கொள்வதே சமய வரம்பாகும். அதனைவிடுத்து ஆய்வாளர் வழியில் உழல்வது சமய வரம்பாகா! ஆய்வாளர் வழியிற் பொருள்கொள்வோர், வேதத்தை ஏற்று இறைவனை மறுக்கும் நிரீசுவரவாத மதமும் வேதத்துக்குரிய தலைவனை மறுக்கும் சுமார்த்தமதமும் தழைத்தோங்கவே திருஞானசம்பந்தப்பெருமான் தோன்றினார் என்று தெய்வச்சேக்கிழார்பெருமான் முடிவுசெய்தனர் என்று இடரடைவர். பாசுபதம் காளாமுகம் வயிரவம் முதலிய சிவசமயத்தவர் அனைவரும் திருஞானசம்பந்தப் பெருமானின் திருமணத்தில் கலந்து கொண்டு முத்தி பெற்றனர் என்று பெரியபுராணம் கூறுவதிலிருந்து, தெய்வச் சேக்கிழார் வேதநெறி என்று வலியுறுத்தியது, சிவ-பரத்துவ நெறிகள் யாவற்றையும் ஒருங்கு குறிக்கும் பொருட்டென்று தெளியலாம்.

**இலங்கையில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் என்று விளங்கிய கல்லூரிகள், இந்துவென்று பெயர் மாறியது ஏன்?**

தமிழர் கல்வி நிலையங்கள் தமிழ்ப் பெயரில் இருத்தல் வேண்டும் என்று சிந்தித்து, வித்தியாசாலை என்னும் பெயரினைக் கல்லூரி என்று பெயர் மாற்றஞ் செய்தனர். வித்தியாசாலை என்பதன் வேர்ச்சொல்லும் தமிழே என்பது பிறிதொரு நிலை. இவ்வாறு பெயர் மாற்றஞ் செய்யும் காலத்தில், சைவத்தின் ஆங்கிலப்பதமே இந்துவென்று பலரும் சிந்திக்குமாறும், இந்துவென்று இருந்தால் இந்தியா ஆட்சியாளருடன் இலகுவில் நெருக்கத்தை வளர்க்கலாம் என்றும் சிலர் நம்மவரை தவறாக வழிநடத்தினர். யாழ்ப்பாணம் முதலிய தமிழர் நிர்வாகக் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்குத் தமிழ்நாட்டில் இருந்து பல சுமார்த்தமதத்தார் குடியேறியிருந்தனர். கோயில்களில் மடப்பள்ளி முதலிய பணிகளுக்கும் அம்மதத்தாரே பெருமளவில் அழைக்கப்பட்டிருந்தனர். அச்சுமார்த்தமதத்தார் தம்மதப்பெயரைத் தனித்துவமாகப் பயன்படுத்தினால், கந்தபுராணக் கலாசாரமாகிய இலங்கையில் தம்மை நிலைநிறுத்த முடியாதென்று நன்கே உணர்ந்திருந்தனர். ஏனெனில் அம்மதத்தாரின் கொள்கையும் **"உயிரே கடவுள்"** என்னும் ஏகான்மவாதக் கொள்கையாகும். கந்தபுராணத்தில் சூரபத்மன் பின்பற்றிய கொள்கையும் அக்கொள்கையேயாகும். உயிரிலும் ஒன்றாய் உடனாய் வேறாய் கடவுள் உள்ளார் என்னும் சைவசித்தாந்தம், உயிரே கடவுள் என்னும் ஏகான்மவாதக் கொள்கையை வீழ்த்தும் அருள் விளையாட்டே கந்தபுராணம் என்பதுதான் பண்டிதமணி முதலியோர் விளக்கித் தமிழரிடம் வீறுகொண்டிருந்தது. எனவே, தம்மை அச்சூரபத்மனின் கொள்கையைக் கைக்கொள்ளும் மதத்தார் என்று தனித்து அடையாளப்படுத்தி, இலங்கை மண்ணில் உயரமுடியாதென்று அம்மதத்தார் நன்குணர்ந்திருந்தனர். அதேசமயம், சைவசமயம் என்னும் பெயரை ஏற்றுச், சைவராகி, சைவவழியில் உயர்வதும் அவர்களுக்கு உவப்பாக இருக்கவில்லை. எனவே, அம்மதத்தாருக்குச் சைவசமயம் என்னும் சொல்லாட்சியும் தம்மதச் சொல்லாட்சியும் அல்லாத பிறிதொரு சொல்லாட்சி, தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அவசியமாயிற்று. எனவே, இந்துவென்ற பெயரைத் தம்மை சைவரிடையே நிலைநிறுத்த உகந்ததாகத் தோன்றியது. அதனைச் சைவசமயத்தார் ஏற்றாலேயே தாம் உயரமுடியும் என்று சிந்தித்து, இந்துவென்பதனைப் பொதுச்சொல் என்று மயக்கி, வித்தியாசாலையைக் கல்லூரியாக்கிய காலத்தில் சைவத்தை இந்துவாக்கினர். நம்மவரின் சமய உணர்ச்சியில் ஏற்பட்ட தாழ்வு மட்டுமல்ல, நம் வரலாற்றில் பண்பாட்டில் நமக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவே இதுவாம்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## தேரோடும் தேசத்து சிவன் கோயில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர்



(கடந்த திங்கள் தொடர்ச்சி )

### பூசைகளும் விழாக்களும்

ஆரம்பத்தில் வீரசைவ மரபுகளுக்கும், வீராகம விதிமுறைகள் சார்ந்த வண்ணமே சங்கம குருமார் பூசைகளையும் திருவிழாக்களையும் நடாத்தி வந்ததாகக் கூறப்படுகின்றது. தற்காலத்தில் பிரமாணச் செல்வாக்குகளும் பூசைகளில் புகுந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. நாள் தோறும் காலை, மாலை, உச்சி ஆகிய முக்காலத்திலும் பூசை தவறாது செய்யப்பட்டு வருகின்றது. இங்கு இப் பூசைகளைச் செய்யும் சைவக்குருக்கள் களுவாஞ்சிக்குடிப் பாகை, வந்தாறுமூலைப் பாகை என இரு பாகை வழியில் சுழற்சி முறையில் பூசை செய்து வருகின்றனர்.

இக்கோயிலின் வருடாந்த திருவிழா ஆவணித் திங்கள் உத்தரத்தில் கொடியேற்றப்பட்டு முழுமதியை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையில் தேரோட்டமும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் உள்ளடக்கியதாக 16 நாட்கள் திருவிழாக்கள் நிகழ்ந்து வருகின்றன. தற்போதைய திருவிழா வைப்புமுறையும். திருவிழா புரியும் குடிமரபின் விபரமும் மேல்வருமாறு காட்டடப்பட்டுள்ளது.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

1-6 நாட்கள் - கோயில் தொண்டூழியருக்குரிய திருவிழா
7 ம் நாள் - வேடகுடியார்
8 ம் நாள் - சட்டி குடியார்
9 ம் நாள் - பெத்தாங் குடியார்
10 ம் நாள் - கோப்பி குடியார்
11 ம் நாள் - கச்சிலா குடியார்
12 ம் நாள் - படையாண்ட குடியார்
13 ம் நாள் - காலிங்கா குடியார்
14 ம் நாள் - உலகிப் போடி குடியார்
15 ம் நாள் - தேசம் - தேரோட்டம்
16 ம் நாள் - தேசம் - தீர்த் திருவிழா

இத் திருவிழாக்களில் தேரோட்டம் இக்கோயிலிற்கு மட்டுமன்றி மட்டக்களப்பு தேசம் எங்கிலும் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தது. மதிய பூசையுடன் 2 மணிக்கு ஆரம்பமாகும் தேரோட்டம் மாலை 6 மணி வரையும் பெருந்திரளான பத்த அடியார்களின் அரோகரா ஒலியுடனும், பெருந் தொகையான கற்பூரங்களை தேர் நோக்கி வீசும் காட்சியுடனும் ரம்மியமான மாலைக் காட்சியுடனும் நிறைவு பெறும். தேரோட்டத்தில் இரண்டு தேர்கள் வலம் வரும். அதிலொன்று சித்திரத் தேர் ஆறடி விட்டங் கொண்ட ஆறு சில்லுகளையும், 16x16 நீள அகலங்களையும், 60 அடி உயரமும் 5 அடுக்குகளையும் கொண்ட மிகப் பெரிய தேராகும். ஆயிரத்திற்கு மேற்பட்ட மரச்சிற்பங்கள், அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. இத்தேர் இலுப்பை மரத்தால் ஆனது. சோழ நாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட பழந்தேராக இன்னும் ஓடக்கூடிய வகையில் இருப்பது தான்தோன்றியப்பனின் அற்புதம் என்றே கூற வேண்டும் இந்தேரில் அம்மையப்ப முருகர் (சோமாஸ் கந்தர்) வலம் வருவார். மற்றைய பிள்ளையார் தேரில் பிள்ளையாரும், முருகனும் வலம் வருவார்கள்.

தேரோட்டம் நிறைவு பெற்றதன்பின் இரவு நேரத்தில் திருவேட்டைத் திருவிழா நடை பெறும். ஆணவமலத்திற்கு ஒப்பான பன்றியை எம் பெருமான் வேட்டையாடி ஆன்ம ஈடேற்றம் நங்குவார் என்ற பாவனையில் இவ் வேட்டைத் திருவிழா நடை பெறும். இதனை **"சூகர வேட்டை"** (சூகரம் - பன்றி) எனவும், **"பன்றி தின்றவன் பரமஞானி"** என்னும் இப்பிரதேச மக்கள் அழைப்பதுண்டு. இத் திருவேட்டையின் போது 7 பாடல்கள் ஒவ்வொரு பாவணையில் பாடப்படும். இதனையடுத்து 'குடுக்கை கூறல்' என்னும் நிகழ்வு தேச மக்கள் அனைவரும் சூழ்ந்திருக்க நடைபெறும் கோயிலுக்கு தொண்டூழியம் புரிந்த அனைத்து வகுப்பினர்களுக்கும் முட்டி கூறும் கல்வெட்டு படிக்கப்பட்டு, அவர்களுக்கு உரித்

தான பங்கு சீர்வரிசையாக வழங்கப்படும், இவை மட்டக்களப்பு தேசத்தின் திருப்படைக் கோயிலாக, தேசத்துக் கோயிலாக நீண்ட காலமாகத் திகழ்ந்து வரும் தான்தோன்றீசுவரப் பெருமான் கோயிலின் பெருமையையும், திருப்படைப்பத்ததியின் சிறப்பினையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இவை தவிர தைத்திருநாள், தைப்பூசம், மாசிமகம், சிவனிரவு, பங்குனி உத்தரம், சித்திரை வருடம், சித்திரக் கதை, ஆனி உத்தரம், ஆடி மறைமதி, திருக்கார்த்திகை, பெருங்கதைப் பூசை, திருவாதிரை முதலிய விசேட தினங்களிலும் பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. மற்றும் நெற்பயிர்ச்செய்கைகளோடு தொடர்புடைய தனித்துவமான பூசைகளும் இக்கோயிலில் நடைபெற்று வருகின்றன. புதிர் எடுத்தல், புதிர் கொடுத்தல், புதிர்உண்ணல், கறியமுது படைத்தல் என்பனவே அத் தனித்துவமான வழிபாடுகளாகும்.

### திருத்தலச் சிறப்புக்கள்

பண்டைக் கால அரசர்களது மதிப்பும் மானியங்களும், சீர்வரிசைகளும் பெற்று, தேசம் முழுவதற்கும். எல்லா சாதி மக்களுக்கும் உரித்துடைய கோயிலாகையால் தேசத்துக் கோயில் என்றும், திருப்படைக்கோயில் என்றும் சிறப்பிற்கப்படுகின்றது. எல்லா சுயம்பு இலிங்கங்களுக்கெல்லாம் மூலமாய் விளங்குவது காசியில் உள்ள இலிங்கமேயாகும். அத்தகைய சுயம்புலிங்கம் கொக்கட்டிச்சோலைதனில் எழுந்தருளி அருளாட்சி புரிவதனால் **"ஈழுத்தின் காசிலிங்கேசுவரராகவும்"** போற்றப்படுகின்றார்.

மட்டக்களப்பில் அன்று தொட்டு இன்று வரை வீரசைவ வழிபாட்டின் சிறப்பிற்கும், வீராகம முறைப்படி பூசைகள் நடைபெற்று வரும் ஒரே ஒரு சிவன் கோயில் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

கொக்கட்டி மரத்தில் சுயம்பாக எழந்தருளி இருக்கும் சுயம்புலிங்கேசுவரரின் அருள் அற்புத சத்தி வாய்க்கப் பெற்றது. போர்த்துக்கேய தளபதி கொடுத்த புல்லை கல் மாட்டிற்கு கொடுக்க அது உயிர் பெற்று எழுந்து நின்று புல் உண்ட அதியத்தால் மட்டக்களப்பு சைவக் கோயில்களெல்லாம் இடித்தழிக்கப்படாமல் பாதுகாத்தமைக்கு தான்தோன்றியப்பரின் அருளற்புதமே காரணம். மட்டக்களப்பில் தேரோடும் ஒரே ஒரு சிவன் கோயில் என்ற பெருமையும் பெற்றது.

### கோயில் இலக்கியங்கள்

கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலின் வரலாற்றை மட்டக்களப்பு மான்மியமே முதல் முதலில் செப்புகின்றது. குறிப்பாக பெரிய கல்வெட்டுப் பாடலில் வரும் சரித்திரம் தல வரலாற்றுடன் தொடர்புபட்டவை. மற்றும் திருப்படைப் பத்ததியில் வரும் திருவேட்டைக் கவி, திருப்படைத்தர்க்கம் ஆகிய பாடல்கள் தலத்தில் இடம் பெறும் வழிபாடுகளையும். தேசத்து மக்களின் தொண்டூழியங்களைக் கூறுவதாக அமைந்துள்ளது.

இப்பிரதேசத்தில் ஆடப்படும் நாட்டுக்கூத்துக்களிலும் மற்றும் பல கிராமிய இலக்கியங்களிலும் இவ் வீசன் மீது பல காப்புப் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன.

இவற்றைவிட வெற்றிலைக்காரப்புலவர் என்று சொல்லப்படும். சின்னப்புலவரும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் தான்தோன்றீசுவரர் மேல் தலா ஒரு ஒரு பதிகங்கள் பாடியுள்ளனர். மகிழை-மகேசன், பண்டி-தர் செ. சிவப்பிரகாசம் ஆகியோர் இச்சிவன் மீது திரு-வூஞ்சல் பாடியுள்ளனர். அம்பிளாந்துறையூர் அரியரன் தான்தோன்றீசுவரர் மீது காவடிச்சிந்து பாடியுள்ளார். திமிலைத்துமிலன் இவ் ஈசன் மீது அந்தாதி பாடியுள்ளார்.

இலங்கையில் தான்தோன்றி சுயம்புலிங்கக் கோயில்கள் இரண்டே உள்ளன. ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள



ஒட்டு சுட்டான் தான்தோன்றீசுவரம் மற்றையது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசுவரம். இதில் மட்டு தேசத்தில் ஒட்டு மொத்த சைவப்பண்பாடுகளையும் சமூகப் பண்பாட்டு பாரம்பரியங்களையும் கட்டிக் காக்கின்ற தேசத்துக் கோயிலாகவும், மண்முனைப் பிரதேசத்தின் மிகப் பெரிய சைவக் கோயிலாகவும் விளங்குகின்றது.

**தான் தோன்று மீச்சரத் தனிப்பெருமை வாழி**
**தக்கபடி தொண்டு செயும் தக்கோர்கள் வாழி**
**வானுயரும் ஈசனது வளர்கோட்டம் வாழி**
**வந்துவழி படுபவர்கள் சந்ததமும் வாழி**
**ஊனுருகி நின்று தமிழ் உரைப்பவர்கள் வாழி**
**உள்ளன்பு மிக்கவர்கள் ஊழிதொறும் வாழி**
**தேன் மருவு கொக்கொட்டிச் சோலை யுகந்துறையும்**
**சிவன் - ஈழத் தமிழ்த் தெய்வம் சிறந்து வாழியவே.**

**(முற்றும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ் வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

**சுந்தரரைத் திருமணக்கோலத்தில் தடுத்தாட்கொள்ளல்**

சுந்தரர் பெருமானின் திருமண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், திருமண நாளிற்கு முன்னாளில் காப்பு கட்டுதல் விழாவும் முடிந்த நிலையில் மறுநாள் நம்பியாரூரரின் திருமணக் கோலத்தைக் காண்டற்குப் பெருவிருப்புடைய மனம் உடையவன் போலக் கதிரவனும் தோன்றினன். நம்பியாரூரரும் நன்கு நீராடி ஆடை அணிகலன் அணிந்து அரச கோலத்தில் குதிரையில் மேல் ஏறி, புத்தூரிலே சடங்கவி சிவாசாரியர் வீட்டிலே அமையப்பெற்ற திருமண மண்டபத்தை அடைந்தார்.

மண்டபத்தை அடைந்த சுந்தரர், குதிரையினின்றும் இறங்கி, உள்ளே சென்று மணமேடையில் அமர்ந்தார். அப்பொழுது ஊரும் பேரும் உருவும் இல்லாதவராயினும் ஆன்மாக்களுக்கு வினைவயத்தால் வந்த ஊரையும் பேரையும் உருவையும் இருவினையொப்பாகிய பக்குவகாலத்திலே ஒழிக்கும் பொருட்டு அருள்வயத்தால் ஊரும் பேரும் உருவுங் கொண்டருளுகின்ற சிவபெருமான், தான் திருக்கயிலாயத்திலே சுந்தரமூர்த்திக்கு வாக்குத்தத்தம் பண்ணியதன்படி அவரைப் இல் வாழ்க்கையிலே மயங்கவிடாமல் தடுத்து ஆட்கொண்டருளும் பொருட்டு ஒரு முதிய பிரமண வடிவங்கொண்டு, அவ்விடத்திலே எழுந்தருளிவந்து நின்று, **"எனக்கு எதிரில் அமர்ந்திருக்கும் இவ்வவையத்தில் உள்ளார் யாவரும் யான் கூறும் இச்சொல்லைக் கேளுங்கள்"** என்று அருளிச் செய்தார்.

இது கேட்ட அங்கிருந்த எண்ணற்ற மறையவர்களும், மணக்கோலம் கொண்ட நம்பியாரூரரும் **"நும் வரவு எங்கட்கு மிக நன்மை பயப்பது இது நாங்கள் செய்த தவமேயாகும்"** என்று கூறி, **"இவ்விடத்து நீர் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்"** என்றனர். இவ்வாறு அவையத்தார் கூற, சிவபெருமானாகிய மறையவரும், நம்பியாரூரரைப் பார்த்து, **"என்னிடத்தும் உன்னிடத்தும் முன்னமேயே அமைந்ததொரு இசைவு இருப்பதால், முற்பட அமைந்ததொரு பெருவழக்கினை முடிவு செய்தபின், உன்னுடைய மணத்தை நீ நடத்த முயலுக"** என்றார்.

சிவபெருமானாகிய மறையவர் இவ்வாறு அருளிச் செய்ய, அங்கு நின்ற ஒப்புமை கூறுதற்கு இயலாத நம்பியாரூரர் தாமும், **"நம் இருவருக்கும் உரியதொரு வழக்கு நின்னிடத்து இருக்குமானால், அவ்வழக்கை முடித்தன்றி யான் மணம் செய்து கொள்ளேன் நீர் முழுமையாக இவ்வழக்கைச் சொல்வீராக!"** என்று கூற, சிவபெருமானாகிய மறையவரும், **"மறை யவர்களே! நான் சொல்லத்தக்க இதனைக் கேளுங்கள், என்னுடைய அடிமையாவன் 'இத்திருநாவலூரன்', இதுவே நான் சொல்ல வந்தது"** என்று அருளிச் செய்தார்.

மறையவராக வந்த இறைவன் இவ்வாறு கூற, அதனைக் கேட்டவர்களாய் அவ்விடத்திலும் நின்றவர்களும் இருந்தவர்களுமாகிய யாவரும், இம்மறையவர் நினைந்தது தான் எவ் வகையது? என, அம்மறையவர் அருகே சென்றார்கள், சினந்தார்கள், சிரித்தார்கள். நம்பியாரூரரும் இம்மறையவர்சொல் மிக நன்றாக இருந்தது என்று அவர் எதிர்நோக்கிச் சிரித்தார். சிரித்த நம்பியாரூரரின் முகத்தைப் பார்த்து, மறையவராகிய இறைவன், நழுவிய மேலாடையை விழாமல் கையால் தாங்கிக் கொண்டு, அவர் அருகில் சென்று அந்நாளில், உன்னுடைய பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு இதுவாகும். அங்ஙனம் இருக்க, **"அட! நீ இன்றைக்கு இகழ்ந்து சிரித்தது எவ்வாறு பொருந்தும்"** என்று சொல்ல.

நம்பியாரூரர், சிவபெருமானாகிய மறையவரைப் பார்த்து, அன்பின் நெகிழ்ச்சியால், சிரித்தலை விடுத்துக், குற்றமற்ற ஆதி சைவர்கள் வேறொரு ஆதி சைவர்க்கு அடிமையாதல் பற்றிச் சொல்லுதல் உன்னிடத்தில் கேட்டோம் ஆதலின் 'பித்தனோ மறையோன்' என்று அவையோர் முன்னிலையில் கேட்டார்.

இந்நிகழ்வை சேக்கிழார் அருமையாக பரவி செல்கிறார்.

**மாசிலா மரபில் வந்த**
**வள்ளல்வே தியனை நோக்கி**
**நேசமுன் கிடந்த சிந்தை**
**நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீங்கி**
**ஆசிலந் தணர்கள் வேறோர்**
**அந்தணர்க் கடிமை யாதல்**
**பேசஇன் றுன்னைக் கேட்டோம்**
**பித்தனோ மறையோன் என்றார்.**

*இவ்வாறாக நம்பியாரூரர் கூறக் கேட்ட மறையவர்,* **“நான் பித்தன் ஆனாலும் ஆகுக! பின் பேயன் ஆனாலும் ஆகுக! நீ இப்பொழுது எத்துணைக் குற்றமாய சொற்களைச் சொல்வாயாயினும் அச்சொற்களால் நான் எத்துணையும் நாணமாட் டேன். அவ்வளவிற்கு என்னை ஒருவகையாலும் நீ இன்னவன் என்று அறியவில்லை. ஆயினும் நீ என்முன் நின்று உன் திறமையைப் (சதுரப்பாட்டை) பேசவேண்டாம். எனக்குத் தொண்டு செய்ய வேண்டும்”** *என்றார்.*

*அப்பொழுது நம்பியாரூரர்* **“இவர் அடிமையோலை ஒன்று உண்டென்றாரே. அதின் உண்மையை அறியவேண்டும்”** *என்று நினைந்து,* **“மறையவரே! உம்முடைய ஓலையைக்காட்டும்”** *என்று சொல்ல மறையவர்* **“நீ இந்த ஓலையைப் பார்த்து நிச்சயிக்கத் தக்கவனோ? நான் இந்தச் சபையாருக்கு ஓலை யைக்காட்டி மெய்யென்று அங்கீகாரஞ் செய்வித்தபின், எனக்கு ஊழியஞ்செய்தற்கு மாத்திரம் தக்கவன்”** *என்றார்.*

*அது கேட்ட நம்பியாரூரர் கோபங்கொண்டு, அவர் கையில் இருக்கும் ஓலையைப் பறிக்கும்படி அவருக்கு எதிரே விரைந்து சென்ற போது, அவர் ஓடத் தாமும் ஓடி, அவரைப் பின்றொடர்ந்து பிடித்து, ஓலையைப்பறித்து,* **“பிராமணர்கள் அடிமையாய் ஊழியஞ்செய்தல் என்னமுறை”** *என்று சொல்லிக் கிழிக்க் மறையவர் சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்கொண்டு, ஒருதரம்* **“இது முறையோ”** *என்று சத்தமிட, அண்மையில் நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கி,* **“உலகத்திலே ஒரு காலமும் நடந்திராத ஏற்பாட்டைக் கொண்டு வழக்காடு கின்ற மறையவரே! நீர் எங்கே இருக்கின்றவர்? சொல்லும்”** *என்றார்கள்.*

*அதற்கு மறையவர் “நான் இந்தத் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறவன். அது கிடக்க, அறநெறிக்குப் புறம்பாக வன்முறை செய்து என் கையிலிருந்த அடிமைச் சீட்டை வலியப்பறித்த இந் நாவலூரன் கிழித்தமையால், அவன் தானே எனக்கு அடிமை என்பதை மெய்ப்பித்து விட்டான் என்று அருளினார். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனார்* **“நீர் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறவராகில், இந்த வழக்கை அங்கே தானே பேசித் தீர்ப்புச் செய்ய வாரும்”** *என்று சொல்ல மறையவர் அதைக்கேட்டு* **“திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்ற பிராமணர்களுக்கு முன்னே ஆதியில் எழுதப்பட்ட மூலவோலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேன்”** *என்று சொல்லி, தண்டை ஊன்றிக் கொண்டு முன்னே நடந்தார். சுந்தரமூர்த்தியும் மற்றப் பிராமணர்களும் பின்னாகப்போனார்கள்.*

*எண்ணிறந்த சுற்றத்தாரும் இவ்வழக்கு என்னாகுமோ? எனும் நினைவுடன் பின் தொடர்ந்து செல்ல, நல்ல மறையவர்கள் வாழுகின்ற திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, அங்குள்ள பிராமண சபையின் முன்னே சென்று அவர்களை நோக்கி,* **“அறிவால் அமைந்த பெரியோர்களே! திருநாவலூரில் இருக்கின்ற ஆரூரனானவன் நான் நீ எனக்கு அடிமையென்று காண்பித்த ஓலையைக் கிழித்துவிட்டு உங்களிடத்துக்கு வந்திருக்கின்றான்”** *என்று சொல்லி முறைப்பாடு செய்தார், அவ்வவையில் இருப்பவர்கள், ஒரு மறையவருக்கு, மற்றொரு மறையவர் அடிமை யாதல் இவ்வுலகத்தில் வழக்கமில்லை. அங்ஙனம் இருக்க, ஐயா! நீர் என்ன பொருந்தா வழக்கைச் சொல்லுகின்றீர்கள் என்றார்கள். யான் கொண்டு வந்த வழக்கு, எழுதிக்கொடுத்த இசைவையுடைய தன்றோ? இவன் கிழித்த அடிமை ஓலை இவன் தந்தைக்குத் தந்தையாகிய பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்ததாகும் என்று தனித்து நிற்கும் மறையவர் சொன்னார்.*

*அவ்வவையில் உள்ள பெரியோர்கள், காண்பதற்கு உடன்பட்டு எழுதிய ஓலையை இம்மறையவர் காட்டினாரானால், அதனை இன்று விரைந்து வலிய வாங்கிக் கிழித்தல் உமக்கு வெற்றியாகுமோ? இம்மறையவர், தம் வழக்கு இதுவென யாவர்க்கும் பொருந்துமாறு சொல்லியுள்ளார். (வெற்றி காண்டலில்) நம்பியாரூரரே! இதற்கு நும் கருத்து யாது? என்று வினவினார்கள்.*

*இவ்வாறு கேட்ட அவையத்தாருக்கு அறிவில்வல்ல நம்பியாரூரர்* **“மறை முதலிய அனைத்து நூல்களையும் உணர்ந்தவர்களே! என்னை ஆதி சைவன் என்று நீவிர் அறிவீர்! இம்மறையவர், உலக வழக்கிற்கு வேறாக என்னைத் தம் அடியன் என்று உறுதிப்படச் சொல்வாரேயானால், அச் செய்தி மனத்தினால் அறியப்படாத தோர் மாயையாய் இருக்கின்றது. இதற்கு யான் என்ன கூறுவேன்? எனக்கு இவ்வழக்கு ஒருவகையில் உறுதிப்படுத்த இயலாததாய் இருக்கின்றது”** *என்று சொன்னார்.*

*நம்பியாரூரர் இவ்வாறு எடுத்துக்கூற, நடுவுநிலைமை உடைய அவ்வவையத்தார், அங்கு நிற்கின்ற மறையவரைப் பார்த்து, “இவ்வுலகில் இற்றைப் போதில் நீர் இந்நம்பியாரூரரை உம்முடைய அடியான் என்று சொன்ன கடுஞ்சொல்லை எங்கள் முன் உறுதிப்படுத்த வேண்டும்” என்று கூறினார்கள்.*

*ஆட்சி, ஆவணம், அயலார் கூறும் சான்று ஆகிய இம்மூன்றில் ஒரு சான்றை இந்நம்பியாரூரர் உமக்கு அடிமை என்பதற்குக் காட்டும் என்று அம்மறையவரிடம் கூற, மறையவர், முன்பு இவன் தன் சினத்தால் கிழித்த ஓலையானது என்னிடத்தில் இருக்கும் மூல ஓலையின் படியோலையாகும். (நகல்) ஆதலின் என்னிடம் உள்ள மூல ஓலையை மாண்புமிக்க இப்பேரவையின்முன் காட்டுதற்கென வைத்துள்ளேன் என்றார்.*

*நீர் கூறியவாறு மூல ஓலையைக் காட்ட இயலு மேல் காட்டுக! என அவையத்தார் கூற, இந்நம்பியாரூரன் இம்மூல ஓலையைப் பறித்துக் கிழிக்காமல் இருக்குமாறு நீங்கள் சொல்ல வல்லவர்களானால் அதனைக் காட்டுகின்றேன் என்று கூற, அதற்குரிய தகுதி வாய்ந்த அவ்வவையத்தாரும் அம்மூல ஓலைக்குத் தீங்கு வாராமல் காப்போம் என்று உறுதி கூறினர்.*

*நம்பியாரூரரின் பிறவித் துன்பத்தை நீக்கி ஆளுதற்கு வந்த அம்மறையவரும் ஆவண மூல ஓலையை அவையத்தார்முன் காட்டி அருளினார். ஓலையைக் கண்ட அவையத்தார், அதனை யாவரும் அறியப் படிக்குமாறு கணக்கனிடம் கூற, அவர் தம் அனுமதியைப் பெற்ற கணக்கனும் அவ்வோலையைத் தொழுது வாங்கிச், சுருளாயிருக்கின்ற மடிப்பை நீக்கி விரித்து, அதன் பழமையைப் பார்த்து, அறநூல் உணர்வில் தெளிவு பெற்றிருக்கும் அவ்வவையத்தார் கேட்குமாறு அவ்வோலையில் இருந்த செய்தியை வாசிக்கத் தொடங்கினான்.*

**திருச்சிற்றம்பலம்**

**திருமலைச் சருக்கம் - (157 - 204)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# திருவாசகத் தெளிவு -

# புழுக்கணுடைப் புன்குரம்பை



உயிர்களுக்கு வழங்கப்பட்ட இந்த உடல் அற்புதமானதொரு கருவி. நினைப்பதை நுட்பமாகச் செய்வதற்கும், ஆன்மாக்களுக்கு ஒரு உருவத்தை கொடுப்பதற்கும் இந்த உடல் வளர்ச்சி அடைகின்றது. இந்த உடலைத் தளமாகக் கொண்டே ஆன்மா அறிவைப் பெறுகின்றது. அறிவு புறத்தால் வருவது மட்டுமன்று, இயல்பாகவே அறிவுப் பொருளாக அது ஆன்மாக்களுக்கு உள்ளே இருக்கின்றது. உள்ளே இருக்கும் அறிவு தானாக வெளிப்பட்டு ஆன்மா தன்னை ஒரு அறிவுப்பொருளாகஅறியுமாறுகாட்டாது. மாறாகபுறத்தால்வரும் அறிவே அகத்துள் இருக்கும் அறிவை மேலெளச் செய்யும். நீர் இறைக்கும் ஒரு இயந்திரத்திற்கு முதலில் வெளியே இருந்து சிறிதளவு நீரை அதன் உள்விடுவார்கள், அதன் பின் அது செயற்பட்டு ஆழக்கிணற்றுள் இருக்கும் முழு நீரையும் வெளிப்படுத்தும். இவ்வாறே ஆன்மாக்களின் அறிவும் புலப்படும் எனக்கொள்க.

இந்தப் புறத்தே இருந்தான ஆரம்பத்திற்கு இவ்வுடல் மிக அவசியம். எனினும் இவ்வுடல் வேறு ஆன்மாவாகிய தான் வேறு என அறியாத உயிர்கள் உடலே தாம் என மயங்குவதுமுண்டு. அம்மயக்கம் அறிவு எழுச்சிக்கு காரணமாகிய மாயையினாலேயே உண்டாகின்றது. அறிவும் அறியாமையும் ஓரிடத்தில் இருப்பது வியப்பன்றோ! நிற்க.

உடலை உயிர் என எண்ணி நாம் அதனை அழகு செய்கிறோம். அதைப் பேணுவதில் அதிக ஆர்வம் கொள்கின்றோம். எனினும் அது அழிந்துவிடும். மரணத்தின் பின் அது வெறும் கூடாகக் கிடக்கும். புழுக்கள் உருவாகி உடலை அழுகச் செய்யும். மாயா காரியமாகிய சட உடம்பு அழிந்து போகும். அழிந்துபோகும் இவ்வுடலைக் கொண்டு அழிவேயில்லாத இன்பத்தை நுகர நாம் என்ன முயற்சி செய்தோம்? நாம் செய்யும் முயற்சி எல்லாமே நிலையற்ற இன்பத்துக்கான முயற்சியன்றோ?

மாணிக்கவாசகப் பெருமான் உத்தரகோசமங்கையில் இருந்தார். பொற்றாமரைக்குளத்தில் சோதி தோன்றிற்று. உடனிருந்த அடியார்கள் எல்லாம் உடனே போய் அதிற் கலந்து சிவ ஐக்கியம் ஆயினர். ஆனாலும் மாணிக்கவாசகருக்கு தன் உடல் மீது சிறிதளவேனும் பற்று இருந்திருக்க வேண்டும். அதனால் உடலை விடுத்து சோதியில் கலக்க கணப் பொழுது தயங்கியதால் இறைவன் அவரைவிடுத்து மற்றோரை அணைத்துக் கொண்டான். மாணிக்கவாசகரை சிதம்பரம் வரச்சொல்லி மறைந்தான்.

அதனாலே தான் மாணிக்கவாசகர் பிரிவுத்துயர் ஆற்றாது திருவாசகம் எங்கும் தன்னைப்பழித்தும், தன் உடலைப் பழித்தும் பாடினார். **“பழுத்த மனதுடைய அடியவர்கள் இறைவனிடம் போய் விட்டனர், புழுக்கள் வாழும் இடமாகிய உடலை உண்ணிய நான் இனி என் செய்வேன்? அடைக்கலம் நீயே”** எனப்பாடுகிறார். அவரது ஞானநிலை உயர்வானது ஆயினும், **“கல்வி ஞானமில்லா அழுக்குமனம்”** உடையவன் என்கின்றார். எனில் கல்வி இறைவனை நோக்கிய கல்வியாக இருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

எனவே மாயை தந்த உடலை உயிர் எனக் கருதாது, அதன் பயனால் உள்ளே காக்கப்படும் ஆன்மாவைப் பேணி, அவ்வுடலை கருவியாகக் கொண்டு இறைவனைத் தேடி பின் உடல் பற்றும் நீங்கி இறைவனிடம் சென்று கலப்பதற்குத் தயாராக நாம் எம் மனத்தை தயார்ப்படுத்த வேண்டும்.

**“உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம் பட மெய்ஞான் சேரவும் மாட்டார்**
**உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே ”-திருமந்திரம்**

எனவே இந்த உடல் அவரவர் ஞான நிலைகளைப் பொறுத்து உயிராகவும், கருவியாகவும், வெறுங்கூடாகவும் விளக்கும் எனத் தெளிக.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**
**(முதுமாணி - சைவசித்தாந்தம்)**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# தன்னலமில்லாத் தலைவர்கள் வேண்டும்!

இது தேர்தல் காலம். கட்சிகளும் வேட்பாளர்களும் தத்தம் கொள்கைகளைச் சொல்லி வாக்கு கேட்கின்றனர். பரப்புரைகளும் சுவராட்டிகளும் நம் தெருக்களை ஆக்கிரமித்து உள்ளன. எண்ணிக் கையில் மிக அதிகளவானோர் தம்மை இந்த தேர்தல் போட்டியில் இணைத்துள்ளனர் அரசியல் மூலமாகவே மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்கின்ற அவர்களினுடைய சிந்தனை வியக்க வைக்கின்றது. நல்ல தலைவர்கள் கட்டாயம் அரசியல்வாதிகளாகத் தான் இருக்க வேண்டும் என்கின்ற நம் சிந்தனையை நாம் கைவிட வேண்டும்.

மானுட விடுதலைக்காகவும் சமத்துவத்திற்காகவும் உழைத்த பலர் அரசியல்வாதிகள் அல்ல அவர்கள் ஒருபோதும் மக்களின் வாக்கை வாங்குவதற்காக பணியாற்றியவர்களும் அல்ல ஆயினும் அவர்களினுடைய பணிகளை காலம் இன்றளவும் தன் தலை மேல் வைத்துப் போற்றுகின்றது. நாட்டின் உயர் பதவியான அரச பதவியை துறந்து விட்டு ஆண்டியானவர்களும் முதல் மந்திரி பதவியை நீங்கி சமயப் பணி செய்து மக்களை உய்வித்தவர்களும் எங்கள் வரலாற்றில் இருக்கின்றார்கள். அவர்கள் அரசு பொறுப்பையே மக்கள் பணி செய்வதற்கான மூலமாகக் கருதி இருந்தால் ஒரு போதும் அப் பொறுப்புகளை துறந்து இருக்க மாட்டார்கள். எனினும் மக்கள் பணிக் கான தடையாக பதவியும் அதிகாரமும் இருப்பதாக கருதியதால் தான் அவற்றை நீங்கி பணி செய்ய முன் வந்தார்கள்.

பதவிக்காகவும் அதிகாரத்திற்காகவும் ஒருவன் பல இலட்சம் ரூபாய்களை சுய விளம்பரத்திற்காக செலவு செய்கின்றான் எனில் அதன் மூலம் அவன் ஒரு ஆதாயத்தை எதிர்பார்த்து இருக்கின்றான் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். எவன் ஒருவன் தன் சொத்துக்களையும் கொடுத்து சமூகப் பணியாற்றுவதற்கும் சமயப் பணியாற்றுவதற்கும் முன்வருகின்றானோ அவனே சிறந்த தலை வனாகின்றான்.

இருந்த போதும், இன்றைய காலச் சூழலில் இவ்வாறான தேர்தல் நடைமுறைகள் தவிர்க்க முடியாதவையாகத் தான் இருக்கின்றன. தேர்தல் களத்தில் இருப்பவர்கள் பதவிக்கு வந்த பிறகு இந்த சமூகத் துக்காகவும் சமயத்துக்காகவும் பல பணிகள் தம்மால் செய்யப்பட வேண்டும் என்பதை உணர்வது அவசியம்.

குறைந்தபட்சம், வழிபாட்டு உரிமைகள் கூட மறுக்கப்பட்டு இருக் கின்ற வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள சைவ கோயில்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்ப வேண்டும், உயர் பாதுகாப்பு வலயங்க ளாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளுள் பல்லாண்டு காலமாகப் பூசை வழிபாடுகள் இல்லாத கோயில்களில் மீண்டும் கிரிகைகள் நடாத்த அரசு அனுமதிக்க குரல் கொடுக்க வேண்டும், திருகோணமலை சிவன் கோயில் சூழல் சைவப் பெருமக்களின் முழு வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டு கிரி வலம் வருவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். என்கின்ற பல ஆசைகள் சைவத்தமிழ் மக்களிடையே இருக்கின்றன என்பதை எமது பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் செல்பவர்கள் உணர்ந்து, இந்த எதிர்பார்ப்புக்களை வென்றெடுக்கும் வகையில் தம் குரல்களை அப்பெருமன்றத்தில் பதிவு செய்ய வேண்டி யது காலத்தின் கட்டாயம் ஆகும்.

சமயப் பணி செய்ய வேண்டும் என்பதற்காக மாணிக்கவாச சுவாமிகள் தனது அமைச்சுப் பதவியை விடுத்தார். சைவ பெரியார் களினுடைய வரலாற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்பதற்காகவே சேக்கிழார் பெருமானவர்கள் தன்னுடைய முதலமைச்சர் பதவியை விடுத்தார்.

எனவே எவன் ஒருவன் பதவிகள் மீதும் அதிகாரத்தின் மீதும் பற்றுக் கொள்ளாமல் தன் முன்னிருக்கும் கடமையின் மீது பற்றுக் கொண்டு உழைக்கின்றானோ அவனே மக்கள் பணியாற்றத் தக்க மேன்மையான தலைவனாகின்றான்.

சிவப்பணி செய்வதையே பெரும் பணியாக எண்ணி, தடைகள் வந்த போதும் தன்னையே கொடுத்து சிவப்பணி செய்த மூர்த்தி நாயனாரை அரசாட்சி தேடிவந்தது. பட்டத்து யானை அவரைத் தன்மீது சுமந்தது.

கோயில் மலரை எடுத்து முகர்ந்தமைக்காக தன்னுடைய மனை வியின் கைகளை வெட்டிய மன்னனாகிய கழற்சிங்க நாயனாரின் வரலாறு பொது சொத்துக்கள் மீது தலைவர்கள் ஆசை கொள்ளக் கூடாது என்கின்ற பெரும் ஒழுக்க நெறியை போதிக்கின்றது. மன்னனின் மனைவியாக இருந்தாலும் கூட, அவள் ஆசைகொண்டது கோயில் மலராகவே இருந்தாலும் கூட, அதை எடுத்து அனுபவிக்கும் உரிமை மன்னனின் மனைவிக்கு இல்லை என்கின்ற உயர்ந்த நற்பண்பை உணர்த்துகின்றது.

மக்களால் மக்களுக்காக செய்யப்படுகின்ற இந்த மக்களாட்சி யில், தம் பைகளை நிரப்பிக் கொள்ளாமல் தம் குடும்பத்தினை வளர்ப்பதைக் குறியாக கொள்ளாமல், தம் புகழ் ஓங்குவதையும் சுகபோக வாழ்க்கை அனுபவிப்பதையும் நோக்கமாக கொள்ளா மல், பொது சொத்துக்களை முறையாக பேணி அதை எல்லோரும் அனுபவிக்க தக்க வகையில் செயலாற்றுகின்ற நல்ல மனம் படைத்த வர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருத்தல் அவசியம் என்பதையே சைவநெறி சொல்லிநிற்கின்றது.

இவ்விதழ் வெளிவருகின்ற போது தேர்தல் முடிந்திருக்கலாம். ஆனால் மக்கள் விழிப்புடன் அவதானிக்க வேண்டும். யாராக இருப்பினும் பிறழ்வுகளை சுட்டிக்காட்டி கண்டணம் செய்வதற்குப் பின்னிற்க கூடாது!

திருச்சிற்றம்பலம்

# "மெய்கண்டார் விருது"

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கானது

மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) அன்று நடைபெறவுள்ள 'மார்கழிப் பெருவிழாவை' முன்னிட்டு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை வழங்கும் அதியுயர் விருதான **"மெய்கண்டார் விருது"**, தெரிவுசெய்யப்பட்ட அறநெறி ஆசிரியர்களுக்குவழங்கப்படவிருக்கிறது.

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், ஊதியம் இன்றி அல்லது மிகவும் குறைந்த ஊதியத்துடன் உழைக்கும் அறநெறி ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களுக்கு அறத்தினை, பண்பாட்டினை, வழிபாட்டினை, திருமுறைகளை, சாத்திரங்களை மற்றும் வாழ்வியலை எடுத்துரைக்கும் உன்னத சேவையை ஆற்றிவருகின்றனர். இவர்களை பாராட்டுவது நாம் அனைவரினதும் கடமையாகும்.

அந்தவகையில், உங்கள் மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியரின் சேவைகளைப் பற்றி மூன்று பக்கங்களுக்கு குறையாமல் எழுதி, ஆசிரியரின் முழுப் பெயர், கைபேசி எண், அறநெறிப் பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை, மாவட்டம் மற்றும் முகவரியுடன் முன்மொழிபவர் மற்றும் வழிமொழிப்பவர் பெயர்கள், கையொப்பம் மற்றும் தொடர்பிலக்கத்துடன் அனுப்பிவைக்கவும்.

உங்கள் முன்மொழிவுகளை எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 25ம் நாளிற்கு (10-12-2024) முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

**விருதுகள்:**

**ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவாகிய ஆசிரியருக்கு, பெறுமதியான (10,000 ரூபாய்கள்) பணப்பரிசுடன் விருது வழங்கப்படும்.**

**அனுப்பவேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**
+94 70 770 1111/ 021 222 9722

தெரிவின் போது ஆசிரியரின் திருமுறை மற்றும் சித்தாந்த சாத்திரங்களின் பற்றிய அறிவு, கற்பிக்கும் திறன், சமுதாய மேம்பாட்டு உள்ளுணர்வு, வழிபாட்டு ஆர்வம், ஆளுமை, பணிவு, மாணவர் குழு நடவடிக்கை ஈடுபாடுகள், தொடர் பாடல் திறன் மற்றும் முன்மாதிரியான செயற்பாடுகள் என்பன கருத்தில் கொள்ளப்படும். தெரிவு முடிவுகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தென்னாடு மடம் சார்ந்ததே.

**திருச்சிற்றம்பலம்**

**தென்னாடுடைய சிவனே போற்றி**

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# மார்கழிப் பெருவிழா 2024

## வெளிமாவட்ட இலவசப் போக்குவரத்து

மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) அன்று யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள **"மார்கழிப் பெருவிழாவை"** முன்னிட்டு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபையினர் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை செய்துள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து பங்குபற்றும் சைவ சமயத் தலைவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் முன்கூட்டியே பதிவு செய்து, இலவச போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்ளமுடியும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறுபது (60) ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளதால் முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**திருமலை: துசி 0777 043 593**
**மட்டக்களப்பு: காந்தன் 0779 357 622**
**வடமாகாணம்: ஒளியரன் 0776 127 628**

**இணைய முன்பதிவு**

# மார்கழிப் பெருவிழா

## மார்கழித் திங்கள் 10ம் நாள் - (25-12-2024)

## யாழ்ப்பாண கலாச்சார மண்டபம்

### அருளாளர்கள்



சீர் வளர்சீர் திருபெருந்தவத்திரு
சாது சண்முக அடிகளார்
குரு மகாசந்நிதானம் பழனி ஆதீனம்



மௌன மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,
தருமை ஆதீன கிளைமடம்,
திருக்கேதீச்சரம்.



தவத்திரு. சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரியார் சுவாமிகள்
முதல்வர், நல்லை ஆதீனம்



தவத்திரு. அகத்தியர் அடிகளார்
முதல்வர்,
தென்கயிலை ஆதீனம்



தவத்திரு. வேலன் சுவாமிகள்
முதல்வர், சிவகுரு ஆதீனம்

### சிறப்புரை ஆற்றுவோர்



சிவ. பழனிச்சாமி குமரலிங்கம்
செந்தமிழ் வேள்விச் சதுரர்



முனைவர் கோ.ப. நல்லசிவம்,
தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர்,
மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்



சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா
துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்

### வளவாளர்கள்



சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை



பேராசிரியர் சிவத்திரு. ஸ்ரீ.பிரசாந்தன்
தமிழ்த் துறை தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

### நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு



சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
முதல்வர் - தென்னாடு



சிவத்திரு. செந்தமிழாதன் (சஜீவன்)
நெறியாளர், மார்கழிப் பெருவிழா



சிவத்திரு. நிலவன் (நிலக்சன்)
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நிகழ்ச்சி ஒழுங்கமைப்புகள்



சிவத்திரு. ஒளியரசன்
(ஜோதீஸ்வரன்)
தலைமை ஒருங்கிணைப்பாளர்
வெளிமாவட்டங்கள்



சிவத்திரு. தமிழரசன் (சசிராஜ்)
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நிர்வாகம்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அகிலாண்டநாயகி உடனுறை ஆரணியசுந்தரர் - திருக்காட்டுப்பள்ளி (கீழை)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 12ஆவது திருக்கோயில் திருக்காட்டுப்பள்ளி (கீழை)



**"செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்"**

இந்திரன் பூசித்துப் பேறுபெற்றதால் இழந்ததை திருப்பித் தரும் அற்புதத் தலமே கீழை திருக்காட்டுப்பள்ளி அருள்மிகு அகிலாண்டநாயகி உடனுறை ஆரணியசுந்தரர் திருக்கோயில்.

**அமைவிடம்:** நாகப்பட்டினம், தமிழ்நாடு.

சீர்காழியில் இருந்து சுமார் 10 கி.மீ. தொலைவிலும், திருவெண்காட்டில் இருந்து மேற்கே இளையமுதுகுள புரம் செல்லும் சாலையில் சுமார் 1.5 கி.மீ. தொலைவிலும் இந்த சிவத்தலம் அமைந்துள்ளது. சீர்காழி - தரங்கம்பாடி சாலையில் அல்லி விளாகம் என்னுமிடத்தில் திருவெண் காட்டிற்குப் பிரியும் சாலையில் வந்து இலையமுதுகுளபுரம் தாண்டி கீழைத்திருக்காட்டுப்பள்ளியை அடையலாம். ஊரில் சாலையில் இருந்து சற்றுத்தள்ளி வலதுபுறம் உட்புறமாகக் கோயில் உள்ளது.

**இறைவர் திருப்பெயர்:** ஆரணியசுந்தரர், ஆரணியேசுவரர்
**இறைவியார் திருப்பெயர்:** அகிலாண்டநாயகி
**கோயில் மரம்:** பன்னீர் மரம்
**தீர்த்தம்:** அமிர்த தீர்த்தம்

**வழிபட்டோர்:** சம்பந்தர், சேக்கிழார், இந்திரன், நண்டு ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர், சேக்கிழார்

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்





### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்**
**கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்**
**பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம்**
**மெய்யரு கேயுடை யானையுள்கி விண்டவ ரேறுவர் மேலுலகே. (1-5)**

### சேக்கிழார் குறிப்பு

**தோணி வீற்று இருந்தார் தம்மைத் தொழுது முன் நின்று தூய**
**ஆணியாம் பதிகம் பாடி அருள் பெரு வாழ்வு கூரச்**
**சேண் உயர் மாடம் ஓங்கும் திருப்பதி அதனில் செய்ய**
**வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார் - (12-28-128)**

### திருத்தலச் சிறப்பு

ஆரண்ய முனிவர் வழிபட்டதாலேயே, இத்தல மூலவர்க்கு ஆரண்யேசுவரர் எனும் திருநாமம் வந்ததாகக் கூறப்படுகின்றது. விருத்திராசுரனைக் கொன்ற பழிநீங்க இந்திரன் வழிபட்ட தலம். நண்டு பூசித்த பதி. இக்கோயிலுள் பிரம்மேசர், முனியீசர் என்ற பெயரில் இரு சிவலிங்கங்கள் உள்ளன. மண்டபத்தில் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன.

இத்தலத்திலுள்ள விநாயகர் மிகவும் விசேடமானவர். ஒரு சாபத்தால் நண்டு வடிவம் எடுத்த கந்தர்வனால் வழிபடப்பட்டவர் இவர். எனவே இவர் **"நண்டு விநாயகர்"** என்று அழைக்கப்படுகிறார். இக்கோயில் வீதியில் பத்து இலிங்க சந்நிதி இருக்கிறது. இங்கு ஏழு இலிங்கங்கள் இருக்கின்றன. மேலும் ஒரே இலிங்கத்தில் இரண்டு நாண்கள் இருக்கும் இலிங்கம் எங்கும் காணக்கிடைக்காத அம்சமாகும்.இக்கோயிலில் மூலவரே பிரதானம் என்பதால் இங்கு ஒன்பாங்கோள் (நவகிரக) சந்நிதி கிடையாது. இங்கு கோயில் கொண்டிருக்கும் தென்முகக்கடவுள் வழக்கமான நான்கு சீடர்களுக்கு பதிலாக ஆறு சீடர்களுடன் இருப்பது ஒரு அதிசய அமைப்பாகும்.

### திருத்தல வரலாறு

நான்முகப் பெருமானிடம் வரம் பெற்ற விருத்தாசுரன் என்ற அசுரன், தேவர்களை துன்புறுத்தி வந்தான். அவனிடம் இருந்து தம்மைக் காக்கும்படி தேவர்கள் இந்திரனிடம் முறையிடவே, விருத்தாசுரனுடன் போரிட்ட இந்திரன், அவனை கொலை செய்தார். இதனால் அவனுக்கு தோசம் உண்டானது. தேவதலைவன் பதவியும் பறிபோனது. தனக்கு மீண்டும் தேவதலைவன் பதவி கிடைக்க குருவிடம் ஆலோசனை செய்தான். அவர், பூமியில் சிவனை வணங்கிட அருள் கிடைக்கப்பெறும் என்றார்.

அதன்படி பூமியில் பல தலங்களுக்குச் சென்ற இந்திரன், இத்தலம் வந்தார். அடர்ந்த வனத்தின் மத்தியில் சிவன், சுயம்பு மூர்த்தியாக இருப்பதைக்கண்ட அவன், சிவபூசை செய்து வழிபட்டான். அவனுக்கு காட்சி தந்த சிவன், **"நியாயத்திற்காக செய்யும் செயல் எத்தகையதாக இருப்பினும் அதற்கு பாவபலன் கிடையாது,"** என்று சொல்லி அருள் செய்தார். இதுவே இத்தல வரலாறு ஆகும்.

### திருக்கோயில் அமைப்பு

ஆறு சீடர்களுடன் தென்முகக்கடவுள் கருவறையில் சுவாமி சதுர பீடத்தில், மேற்கு நோக்கி காட்சி தருகிறார். வனத்தின் மத்தியில் இருந்தவர் என்பதால் **'காட்டழகர்'** என்றும் மூலவருக்கு பெயருண்டு. இறைவியார் தெற்கு நோக்கி தனிச்சன்னதியில் இருக்கிறார். இங்கு சுவாமியே பிரதானம் என்பதால் நவக்கிரக சன்னதி கிடையாது. சுவாமி சுற்று வீதியில் தென்முகக்கடவுள் ஆறு சீடர்களுடன் வீற்றிருக்கிறார்.

பொதுவாக சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர் ஆகிய நால்வருடன் மட்டும் காட்சி தரும் தென்முகக்கடவுள், ஆறு பேருடன் காட்சி தருவது விசேடம். உயர்ந்த பொறுப்பில் இருந்து பதவி இழந்தவர்கள், நியாயமாக செயல்பட்டும் பதவி உயர்வு கிடைக்காதவர்கள் ஆரண்யேசுவரருக்கும், தென்முகக்கடவுளுக்கும் உடை அணிவித்து, பூசை செய்து வழிபடுகிறார்கள். இதனால் இழந்த பதவி கிடைக்கும் என்பது நம்பிக்கை. பைரவர், சூரியன், சனீசுவரர் ஆகியோர் வீதியில் இருக்கின்றனர்.

நண்டு விநாயகர் இத்தலத்திலுள்ள விநாயகர் மிகவும் விசேடமானவர். ஒரு சாபத்தால் நண்டு வடிவம் எடுத்த கந்தர்வனால் வழிபடப்பட்டவர் இவர். எனவே இவர் **"நண்டு விநாயகர்"** என்று அழைக்கப்படுகிறார். இந்த விநாயகரின் பீடத்தில் நண்டு இருப்பது வித்தியாசமான அமைப்பு. பொதுவாக விநாயகருக்கு இருக்க வேண்டிய மூசிக வாகனமும் இங்கு கிடையாது. நண்டு, இவருக்கு வாகனமாக இருப்பதால் மூசிக வாகனம் இல்லை என்கிறார்கள். சுற்று வீதியில் மகாகாளர் சிவ வழிபாட்டிற்காக சங்கு ஊதிக் கொண்டிருக்க, ஆரண்ய முனிவர் சிவனை பூசை செய்யும் சிற்பம் இருக்கிறது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்றொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**பாயிரம் பாடல் 5 அவை அடக்கம்**

**அளவி லாத பெருமையர் ஆகிய**
**அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்**
**அளவு கூட உரைப்பரிது ஆயினும்**
**அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்**

(அவையைத் தன்னுள்ளே அடக்குதல். தன்னைத் தாழ்த்த லால் அவை அடங்கும் என்பது)

**பொருள் :**



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

அளவற்ற பெருமைகளை உடையார்களாகிய அளவில்லாத அடியார்களின் புகழ்களை எவ்வாறு எடுத்துச்சொல்ல வல்லேன். அவற்றை அளவு கூடும்படிச் சொல்லுதல் அரிது. இருந்தபோதிலும் அளவற்ற ஆசை என்னைச் சொல்வாயாக என்று துரப்பதனாலே சொல்லத் துணிகின்றேன்.

**அளவிலாத பெருமை :**

அடியார்களின் பெருமைகளை ஆசிரியர் பெருமான் திருக் கூட்டச் சிறப்பிலே மிகவும் வியந்து பேசியுள்ளார்.

**பெருமை: செயற்கரும் செய்கை செய்வது**

அப்பூதி நாயனார் புராணத்தில் வாழைக் குறுத்து அரியச் சென்ற மூத்த திருநாவுக்கரசு அரவு தீண்டி இறந்து பின் **"ஒன்று கொலாம்"** பதிகம் அரசுகள் பாடி உயிர்பெற்று வருகின்ற பொழுது அப்பூதி யாரும் அவர்தம் மனைவியாரும் தங்களு டைய பிள்ளை மீண்டும் உயிர்பெற்று வந்துவிட்டான் என்று மகிழ்ச்சி கொள்ளவில்லை, தங்களுடைய குருநாதராகிய நாவுக்கரசு பெருமானுக்கு அமுது செய் வதற்குச் சிறிது இடையூறு செய்தான் என்று சிந்தை நொந் தார்கள் என்று சேக்கிழார் பெருமான் அவர்களுடைய மன நிலையைப் பதிவு செய்து காட்டுகிறார். அதுதான் பெருமை அன்பர் என்பது.'

**"அறிவு அரும் பெருமை அன்பர் அமுதுசெய்து அருளுதற்குச் சிறிது இடை ஊறு செய்தான் இவன்" என்று சிந்தை நொந்தார்.**
**(அப்பூதி நாயனார் புராணம் - பாடல் -37)**

இயற்பகை நாயனார் புராணத்தில் வந்த அடியவருடன் தன் மனைவியை ஊர் எல்லைவரை கொண்டு விட்டுத் திரும் பும் போது திரும்பிக்கூடப் பார்க்காமல் அவர் வந்த நிலை யைச்சேக்கிழார் பெருமான்

**"பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான் என்று**
**மெய்தரு சிந்தையாரை மீளவும் அழைக்கலுற்றான்"**

**என்று இறைவனே மகிழ்ந்து அவருடைய பற்றற்ற நிலையையும் நினைத்து ஆறுமுறை ஓலமிட்டு அழைப்பார்.**

**'இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்!**
**அயர்ப்பிலா தானே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!**
**செயற்கு அரும் செய்கை செய்த தீரனே ஓலம்!**
**என்றான் (பாடல் 29)**

இந்தப் பாடலில் இறைவனே நாயனாரைச் செயற்கு அரும் செயல் செய்த தீரன் என்று ஓலமிட்டு அழைக்கி றார் இதுதான் நாயன்மார் பெருமக்களுடைய அளவில்லாத பெருமை என்பது.

எறிபத்த நாயனாருடைய புராணத்தில் சரித நிறைவில் எறிபத்த நாயனார் புகழ்ச்சோழ நாயனாருடைய பெருமை களை நாளுநாளும் அவர்க்கு அருள் நல்கும் நம்பராகிய இறைவர் தாமே அளந்தாலன்றி நீளச் செல்கின்ற இந்தத் திருத்தொண்டின் தன்மைகளை நினைக்குமிடத்து யாவர் அளக்கும் வன்மையுடையாராவர் ஒருவருமிலர் என்று சேக்கி

ழார் பெருமானே அருளுகின்றார்.

**"ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல**
**வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்**
**நாளுமற் றவர்க்கு நல்கு நம்பர்தா மளக்கி லன்றி**
**நீளுமித் தொண்டி னீர்மை நினைக்கிலா ரளக்க வல்லார்?**
**(எறிபத்த நாய-புராணம்-56)** அளவிலாசை - பேராசை, தனது தகுதிக்கு மீறிய செயல் செய்வேன் என்று எழும் ஆசை துரப்ப- தூண்ட, தூண்டுதலினால் சொல்லப் புகுந் தேன்.

**பாடல் 6 - அவை அடக்கம்**

**தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்**
**பொருவ ரும்சீர் புகல்உற் றேன்முற்றப்**
**பெருகு தண்கடல் ஊற்றுண் பெருநசை**
**ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன்**

**பொருள் :**

பெருத்த அமிர்தமாகிய பாற்கடலை ஊற்றுக் காண உண்ணவேண்டும் என்கின்ற பேராசை கொண்டதொரு நாயினைப்போல்கின்ற தன்மையுடையேன யான். ஆதலின் அறிதற்கரிய பெருமை வாய்ந்த திருத் தொண்டர்களுடைய ஒப்பற்ற பெருமைகளை எடுத்துச் சொல்ல முற்படுகின்றேன்.

**கடல் ஊற்று உண் பெருநசை :**

சிலவற்றை உண்டு வற்றச் செய்து விடுவது போலக் கடலா கிய இதனையும் உண்டு வற்றச் செய்து விடுவோம் என்ற பேராசை. சிறிது சிறிதாக நக்கி உண்பதல்லாமல் ஒரு சேர உண்ண முடியாததால் நாயைக் கூறியவாறு.

ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன் - சுணங்கன் தான் கட்டுப்பட்ட காலம் தவிர மற்றைக் காலத்திலே மலமருந்துதல் முதலிய துர்க்குணமுடையது நாய். மனிதர் நற்கூட்டத்தின் நீங்கிய உடன் இழிசெயல் செய்வர். நாயாயிருந்தால் அந்த இழிகுணம் அதன் இயல்பு என்பர். நாய் அல்லாதிருந்தும் அதுபோன்ற இழிகுண முடைமை மிக்க இழிவு என்பதாம். உருவகமாக்காது உவமமாகக் கூறினார் போலும் என்று சிவக் கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார்.

**தொண்டர்**

தொண்டு செய்வோர் இறைவனுக்கும் அடியார்க்கும் பல வகையாலும் அடிமைசெய்தலைத் தவிர வேறு ஒரு செயலும் செய்யாதவர். அடியார்களுடைய பெருமை என்பது அமிர்தாமாகிய பெருத்த பாற்கடலைப் போன்றது. சொல்லப் புகும் தனது நிலையானது பேராசை கொண்ட ஒரு நாயினைப் போன்றது என்று ஆசிரியர் அடியார்களது பெருமையையும் தன்னுடைய நிலையையும் அவை அடக்கமாக இந்தப் பாடலில் கூறியுள்ளார்.

உயிர்க்கு வேண்டிய நலம் மூன்று 1. இகநலம் (இம்மை நலம்) 2.பரநலம் 3. முத்திநலம். இந்த மூன்றையும் தன்னை வழிபடும் அடியார்கட்கு வழங்கும் பொருட்டு எந்தை கந்தவேள் மூன்று சக்திகளை உடையவராக விளங்குகின் றார்.

1. இகநலம் வழங்குதற் பொருட்டு வள்ளியை வலப்பால் கொண்டுள்ளார் - (இஃது இச்சாசக்தி)

2. பரநலம் வழங்குதற் பொருட்டுத் தெய்வயானையை இடப்பால் கொண்டுள்ளார். (இது கிரியாசக்தி)

3. வீட்டு நலம் வழங்குதற் பொருட்டு ஞானவேல் ஏந்தியுள்ளார் (இது ஞானசக்தி)

**தொடரும்**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# இரண்டு நாள் தமிழ் வழிபாட்டு பயிற்சிப் பட்டறை

தென்னாடு சைவ மாணவர் சபையினர் நடாத்தும் மார்கழிப் பெருவிழாவில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா அவர்களின் நெறிப்படுத்தலில், செந்தமிழ் வழிபாட்டு பயிற்சிப் பட்டறை, வருகின்ற மார்கழித் திங்கள் 11ம் , 12ம் நாட்களில் (டிசம்பர் 26, 27) இடம்பெறும்.



இப்பயிற்சி பட்டறையானது இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெறும். இப்பயிற்சி நெறியானது செந்தமிழ் அர்ச்சகர்களிடையே சிறந்த தெளிவினை ஏற்படுத்தும் வகையிலேயே முன் னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில் சைவ அனுட்டானம், சிவபூசை, வாழ்வியல் சடங்குகளின் அடிப்படை ஆகிய நெறி கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செந்தமிழ் வழிபாட்டின் வளர்ச்சிக்கு துணை செய்யும் வகையில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால், இப்பயிற்சி பட்டறை யானது ஒழுங்கமைக்கபடுகிறது. எனவே பங்குகொள்ள விரும்பும் அடியார்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளவும்.

**முன்பதிவு செய்ய** - +94 70 770 1111
021 222 9722

**திருச்சிற்றம்பலம்**

# Australian Prime Minister Visits Sydney Murugan Temple


























# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# TAMIL HERITAGE MONTH AUSTRALIA

How do you know a Tamil person is Tamil? They will tell you. That is the extent of the im mense pride and respect that we Tamils shower our language and culture with. It's a millennia-old culture with values that have stood the test of time and hence, certainly should have a Tamil Heritage Month in January in Australia which is home to around 100,000 Tamils nationwide. Tamil is the oldest language and culture in the world and calls for recognition. Its ancient values align with the cultural values of Modern Australian society and would benefit all parties if such a month is defined in the Australian calendar. Tamil Heritage Month will aim to preserve and propagate the ancient Tamil language and culture for the next generation of the Tamil diaspora within Australia whilst also setting a precedent for other nations to follow suit. Additionally, it also aims to celebrate the Tamil language and literature and facilitate and encourage research on the antiquity and con tinuity of the literary heritage.

Declaring Tamil Heritage Month in January the Tamil month of Thai would immensely preserve our language within Australia. Tamil's linguistic history spans over two millennia, with ancient texts such as Tolkappiyam, which not only detail the language's grammar but also reflect the social and cultural life of the time. For the Tamil diaspora, including younger generations born and raised outside of native lands the preservation of our language is essential for maintaining a connection to their heritage, identity, and cultural values. For the next generation living in the diaspora, Tamil Heritage Month could serve as a powerful educational and cultural resource, ensuring that children and youth are not only exposed to the language but also inspired by its beauty and historical significance. This could include cultural events such as Melbourne and Sydney's Pongal Festivals held every January where young people can learn and engage with the language and culture, in a meaningful, interactive way.

During Tamil Heritage Month, the community could host exhibitions, performances, and workshops that bring Tamil arts to life for people from all backgrounds. Bharatanatyam, a classical dance form known for its elegance and expression, and Carnatic music concerts could introduce audiences to the deep spiritual and artistic dimensions of Tamil performance arts. In addition to performances and exhibitions, interactive workshops in these art forms would invite community members of all backgrounds to experience Tamil culture firsthand, allowing for a richer appreciation of its depth and history.

In conclusion, declaring an Australian Tamil Heritage Month would be bountiful in recognising the great efforts of the Australian Tamil diaspora to the nation and will aid in preserving the language and culture of our people.

# Nainai Nagapoosani Amman Temple



The Nainativu Nagapoosani Amman Temple (நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில்) , a globally revered site of spiritual and historical importance, is located on Nainativu Island, just off the coast of the Jaffna Peninsula in northern Sri Lanka. Known for its deep cultural roots, the temple draws countless Saiva devotees, tourists, and religious enthusiasts due to its unique architectural and cultural significance.

## Historical Significance

The temple is also closely associated with the Naga serpent, representing fertility, prosperity, and the cycle of life, a symbol much respected in Saivam. A statue of the snake, as old as 8000 years old, stands centred and tall in the middle of the temple. Each year, colourful festivals and vibrant rituals are held at the temple, drawing crowds who come to participate in the spiritual celebrations, adding to the lively atmosphere that permeates the site. Nainativu Nagapoosani Amman Temple has a respected history, marked by both resilience and worship. The historical stories have been documented by etching it in meticulous detail on the temple's chariot. Each engravement tells the tale of each hardship the temple has faced. This also includes its destruction during the Portuguese invasion. Despite such events, the temple stands today as a cherished site where devotees believe Amman once resided, voffering inspiration to those who visit.



Nianthri Vijekumaran
Grade 9,
St Margaret's Grammar
Burwick

## Cultural Significance

The temple's architecture, characterised by its colourful style, it is a remarkable example of South Indian temple design. Its intricate structures and vibrant arches showcase the artistry and devotion of the Saiva faith. Beyond its aesthetic appeal, the temple's significance lies in its association with the goddess Nagapooshini Amman, who symbolises fertility, protection, and rebirth. As the only location in Sri Lanka believed to contain a part of Amman's divine scattered body, the bangle, it is considered a highly sacred place. Nainativu Nagapoosani Amman Temple is one of the 64 Shakti Peedam of Saivam, and is the only temple in Sri Lanka to hold that honour. The temple is reputed for its Veduvak Thiruvala and Thepa Thiruvula.

Located 23 miles off the coast of Jaffna, the only means to reach Nainatheevu island is by ferry. Although the commute may be challenging devotees undertake this journey appreciating the richness of spirituality at the temple. Despite the distance and the effort required, the Nainativu Nagapooshini Amman Temple remains a cherished symbol of Saiva cultural heritage, embodying centuries of devotion, tradition, and resilience.

# An Introduction to the Periya Puranam, 'Chronicles of Devotion'



Periya Puranam, the Tamil literary masterpiece, is more than a historical record; it's a profound testament to faith and devotion that has resonated across centuries. Penned by the revered poet Sekkizhar in the 12th century, Periya Puranam immortalizes the lives of the 63 steadfast devout Saivite saints, known as the Nayanar/Nayanmar. These figures, drawn from varied walks of life— poets, potters, hunters, toddy drawer, washer, fishermen, weavers, kings and many more—embodied an unwavering devotion to Lord Shiva, illuminating the path of Tamil Saivism with tales of immense sacrifice, fervor, spiritual discipline, leading to intense personal transformation and miraculous deeds, effectively destroying any and all concepts of self-worth and personal merit regarding spirituality, which stem from constructs like casts, pedigree and stature of nobility.

Originally titled Thiruthondar Puranam, meaning "Epic of the Blessed Servants," the text was later revered as Periya Puranam, or "The Great Epic," for its encompassing representation of Saivite devotion. This masterpiece follows the path laid out by (Nambi Aarurar) Suntharamurthy Nayanar's Thiruththonda Thokai, an 11-verse compilation listing the devotees of Lord Siva. Sekkizhar expanded upon these verses, in conjunction with the Thiruthondar Thiruvanthathi, penned by Nambiyandar Nambi, creating an epic that honored each saint's journey to spiritual liberation, claiming it's place as the finale of the 12 Thirumurai system of the Saiva clan via 4253 pristine Tamil versus.




**Srisankarshan Srisatkunarajah**
English Eeditor
2023 Batch,
Jaffna Hindu College


### Origins and Influences of Periya Puranam.

At a time when war was but a tale and Tamil literature and culture flourished as one, Sekkizhar was appointed by the Chola king Kulothungan II. Due to the king's persuasions with texts of other competing religions like Seevaka Chinthamani, the fifth of the 'Five great epics', Sekkizhar sensed the urgency of the lack of great enough original Saivite Tamil epics, birthed in the land and ways of Tamil people themselves. He saw the ruling potential of the dynasty and the spiritual potential which fueled it, diminish as the King himself was heeding to the calls of concepts of Shrinkram and materialistic fascinations of mundane life. With the ideology that paththi (Bhakti) should be the only waking thought for any devout Saivite, let alone the King of the ceremonious Cholas, he parlayed with the King regarding solutions and actions upon this matter resulting in an agreement where he was requested to deliver an epic, worthy of such reverence and grasp, that it solely was enough to place the other works of literature, how ever great, on the back burner.

After he cited the lives of the saintly 63 having risen and attained from Tamil soil, the court was moved considerably to the point where the King himself requested Sekkizhar to pursue the completion of this epic full time,

releasing him from his ministerial duties. What emerged was an epic that not only narrates but also glorifies each saint's journey equally as much as the fruit of their toils. Periya Puranam itself was inspired by the gathering of Shaivite devotees known as Sivanadiyar, and their description in Thiruththonda Thokai. This congregation took place in Thiruvarur, a significant spiritual center, where Suntharamurthy Nayanar recited the names and praises of the Nayanars in the 11 versus.

The saints of Periya Puranam are celebrated for their extraordinary acts of faith, ranging from material renunciations to heroic demonstrations of loyalty to Shiva as a small snippet of the large spectrum on which they fall. These stories serve as timeless examples of devotion, inspiring generations of Saivites and enriching Tamil literature with a spiritual heritage as intended by Sekkizhar.

This introductory piece begins our journey into these lives, exploring the saints not only as religious icons but also as figures whose lives intertwined with the social, political, and cultural fabrics of Tamil society, exploring the origin and limits of sacrifice, sense of self, attachment, pain, carnage, devotion, materialism, spirit, spirituality, gender, norm, faith, servitude and surrenderance, through




intense encounters. In forthcoming articles, we'll delve deeper into each saint's life, unraveling the personal sacrifices, mystical experiences, and timeless messages embedded in their stories.

## The Saints and their Devotion

The Nayanars' paths to Lord Shiva varied but converged in their unfaltering devotion. They represent a diverse mix: from kings like Pugazh Chola to humble devotees like Kannappar, a hunter who offered his own eyes to the deity, and female saints such as Karaikkal Ammaiyar, revered as the "Mother of the Paththi (Bhakti) movement." This diversity underscored a revolutionary idea in Tamil literature: caste, occupation, or gender could not limit spiritual elevation or the potential for divine union.



| The ensemble of the saintly 63: (Individual saints) | | |
|---|---|---|
| 1. Tiruneelakandar | 22. Kurumbar of Perumizhalai | 43. Kaliyar |
| 2. Iyarpagayar | 23. The lady of Karaikal (Ammaiyar) | 44. Sathiyar |
| 3. Marar of Illayankudi | 24. Apputhi Adikal | 45. Ayyadigal The Kadava King |
| 4. Meyporular | 25. Thiruneelanakkar | 46. Kanampullar |
| 5. Viranmindar | 26. Naminanthi Adikal | 47. Kariyar |
| 6. Amarneethiyar | 27. Thirugnanasampanthar | 48. Nindraseer Nedumarar |
| 7. Eripathar | 28. Kalikkamar of Eyars | 49. Vayilar |
| 8. Enadinathar | 29. Thirumoolar | 50. Munayaduvar |
| 9. Kannapar | 30. Thandi Adikal | 51. Kazharsingar |
| 10. Kungiliya Kalayanar | 31. Moorkar | 52. Indankazhiyar |
| 11. Manakkanjarar | 32. Somasimarar | 53. Cheruthunayar |
| 12. Arivattayar | 33. Chakkiyar | 54. Pugazhthunayar |
| 13. Anayar | 34. Chirappuliyar | 55. Kotpuliyar |
| 14. Moorthiyar | 35. Chiruthondar | 56. Pusalar |
| 15. Murugar | 36. Kazharitrarivar | 57. Mangayarkkarasiyar |
| 16. Rudrapasupatiyar | 37. Gananathar | 58. Nesar |
| 17. Thirunalaippovar | 38. Kutruvar | 59. Kochengatcholar |
| 18. Thirukkuripputhondar | 39. Pugazh Cholar | 60. Thiruneelakanda Yazhppanar |
| 19. Sandeswarar | 40. Narasingamunayar | 61. Sadayanar |
| 20. Thirunavukkarasar | 41. Athipaththar | 62. Isaignaniyar |
| 21. Kulachirayar | 42. Kalikkampar | 63. Suntharar. |

**The other nine groups, categorized as saintly, are:**

1. Sivachariyars who take abode in Chidambaram (Thillai Vaazh Anthanar)
2. Poets who aren't slaves to falsehood (Poyyadimai Illatha Pulavarkal)
3. Humble devotees (Paththarai Panivarkal)
4. Those who sing only the Lord's praises (Paramanaiye Paduvarkal)
5. Those with their mind always dwelling on Lord Siva (Chitthatthai Sivanpale Vaitthavarkal)
6. Those born in Thiruvarur (Thiruvarur Pirantharkal)
7. Those who practice worship thrice daily to Siva (Muppothum Thirumeni Theenduvarkal)
8. Saints who adorn the sacred ash all over their body. (Muzhu Neeru Poosiya Munivarkal)
9. Saiva devotees, wherever they live. (Appalum Adi Sarnthar)

This epic does not just record the saints' lives but emphasizes the unifying power of devotion and the default state of inclusivity of the Sivanadiyar and the broader Saiva clan. Each story reflects the principle that even everyday acts, when dedicated with pure intent, are elevated to divine acts of worship.

The Periya Puranam remains a cornerstone in Tamil spiritual literature, not only as a chronicle but as an inspiration for generations. It has been recited and celebrated for centuries, reinforcing Tamil devotion to Lord Shiva and the undying legacy of these saints. Through this series, Thennadu aims to honor these spiritual forebears and celebrate their contributions to Tamil spiritual and literary traditions.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Thirugnanasampanthar was a Saiva poet/ saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thiruk kadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.



Siva
P.Abiram
SG

Sampanthar once travelled to Tharuma puram near Karaikal. Tharumapuram was the birthplace of Thiruneelakanda Yazhpanar's mother. Thiruneelakanda Yazhpanar's relatives said that Sampanthar's hymns were spread all over the world due to Yazhpanar's Yazh. Hearing these comments, Yazhpanar credited Sampanthar and asked Sampanthar to sing a song he would not be able to accompany on his Yazh.

Sampanthar sang a hymn that goes as follows:

மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னது ஓர்
நடை உடை மலைமகள் துணை என மகிழ்வர்,
பூதவி இனப்படை நின்று இசை பாடவும் ஆடுவர்,
அவர் படர் சடை நெடுமுடியது ஓர் புனலர்,
வேதமொடு ஏழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரை நுரை கரை பொருது, விம்மி நின்று, அயலே
தாது அவிழ் புன்னை தயங்கு மலர்ச் சிறைவண்டு அறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம்பதியே.

Maathar madappidiyum mada annamum annathu oor
Nadai yudai malaimakal Thunaiyena makilvar
Puuthavi inappadai nindru isai paadavum aaduvar
Avar padar Sadai nethumuthiyathu oor punalar
Vethamodu ezhisai paaduvar aalkadal venthirai
Irai Nurai karai poruthu vimmi ninru, ayale
Thathu avil punnai thayanku malar siraivandu Arai
Ezhil pozhil kuyil payil tharumapurampathiye.

Sivan̲ feels happy in having the daughters of the mountain who has a gait like the tender swan and the lovable tender of a female elephant, as his companion. Dances when the groups of army of putam stand by his side and sing.The foam of the white waves of the deep sea dash against the shore and increase in size. His place is Tharumapuram which has beautiful gar dens where the bees with wings hum noisily in the shining flowers of the mast-wood tree which shed their pollen in the neighbourhood.

Yazhppanar was unable to accompany Sampanthar's hymn on his Yazh, so he tried to break his instrument out of anger. Sam panthar controlled him and told him that the songs he sang through lord's grace could not be contained by mere instruments.

**To be continued...**

# Why and How of Creation-Example of Potter



**Last month Summary :**

Sivakan, a 8 year old kid, was talking with his friends about Vinai, however his friends could not fully grasp its meaning so he told them Vinai manifests in three forms, past, present, and future actions which shape the soul's experiences across multiple lifetimes. The cycle of birth, death, and rebirth is governed by the consequences of one's deeds, with Sivan guiding the soul through these experiences to reduce the burden of accumulated karma.

Today's topic for discussion is how the world was created and why it was created. I started narrating about the potter in our village.

'You might have all seen the potter in our village making the pots. What are the instruments he uses to make the pots? A big potter's wheel and a long pole are his instruments. He brings wet clay from the pond nearby, kneads it with more water to a desired consistency. That kneaded clay is placed in the center of the potter's wheel and the wheel is rotated with the long pole.

He shapes the clay into a pot supporting it with his hand, while the wheel is made to move faster. Here, the cause is the clay and the pot made from it is the effect. This clay is the primary cause also known as material cause. Two other causes are also required for making the pot. The instrumental cause is the wheel and the pole. The efficient cause is the potter himself. Out of these three causes even if one cause is absent, the pot, the effect cannot be made at all.

The same is true with the world where the Uyir (Jivas) are born. For creation of the world, The Lord Almighty, like the potter, is the efficient cause (Nimiththa Kaaranan). Just as the potter's wheel and the long pole served as instrumental causes in pot making, creation of the world too has two instrumental causes. The Lord Almighty's will (Aanai), also termed as His inseparable Saththi (Shakti), is one instrumental cause. The other is the good and bad deeds (Vinai) performed by the Uyirkal (Souls / Jivas) as ordained by Saththi (Shakti). The primary or material cause is Maayai out of which the effect, the world including the jiva's bodies etc. is affected.

Let me restate this once again. We saw that in the process of pot making, the material cause is the clay; the secondary cause is the potter's wheel and the efficient cause is the pot maker, all the three are essential. In the same manner, maayai is the material cause; the two-fold deed (Vinai) performed by the Uyir (Jiva) is the secondary cause. Both are essential for the creation of the world. The one who affects the manifestation of the world from its cause, is the efficient cause, the Lord Almighty. Both the Maayai, and the two-fold deeds (Vinai) are also eternal entities just as Lord, the efficient cause is eternal.

Now let us see why the world is created by the Lord. In the above example the potter creates the pot for his own sake, to earn his living. But why does the Lord Almighty create various bodies etc. for the souls? What is the reason behind it? What benefit does he gain out of it? The Lord Almighty is of the

nature of infinite Bliss. He is omnipotent and everything belongs to Him. His creation is for the sake of the souls, out of compassion for them and not for His own sake 17

The Uyirkal (Jivas) are in bondage - in the darkness of ignorance about the creator, the Lord Almighty. It is called Aanavam. It atomises the soul's intelligence (Anuthvam) thereby incapacitating it to function. But the Lord is compassion incarnate by nature. Hence out of infinite compassion for the souls, He provides the body, the world etc. so that they are given the opportunity to free themselves of the bondage of ignorance'.

The friends were listening with awe and wonder. They were surprised to hear such a simplified explanation of an intricate, delicate topic of profound importance with a simple example of a pot maker. With the satisfaction of understanding the 'why and how of creation of the world' everyone dispersed from there.

Saiva Philosophy Reference: The takeaway of this story is that creation is a compassionate act by the Lord, who serves as the efficient cause, shaping the universe for the souls' benefit. Like a potter making pots, the Lord uses Maayai (material cause) and the souls' accumulated Vinai (karma) as instrumental causes. This creation enables souls, bound by ignorance, to work through their karma and progress towards enlightenment under the Lord's guidance.

Reference: Saiva Siddhantham – A Way of Life by Kovai Kizhar

# Tamil Heritage Week Jan 13 – Jan 19th By Cumberland Council Sydney

Today on the 13th of November 2024 Cumberland's Greens Clr. Sujan Selventhiran proposed a motion for Tamil Heritage Week within the council from January 13th to 19th 2025. This is an astounding initiative undertaken by Councillor Slevan, and the entire Tamil community applauds and appreciates his efforts. The council approved the motion enabling the conduct of many Tamil cultural programs and workshops to ultimately promote and maintain our culture. Mr.Ketharan Partheepan , President of School of Tamil Philosophy also got to speak for this motion as a member of the public and voice his wholehearted support for Clr Selvan in his ambitious initiatives. A special thanks must be also given to Cumberland Clr. Suman Saha who seconded and supported this motion continuing his immense support for the Tamil community of Western Sydney.







# தென்னாட்டு நிகழ்வுகள்









புரட்டாசித் திங்கள் இரண்டாவது நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (17-10-2024)



# தென்னாட்டு நிகழ்வுகள்



கந்தன் கவினாறு (கந்தசட்டி) நோன்பு முருகன் சிறப்பு அலங்காரத் திருக்கோலங்கள்



ஐப்பசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (29-10-2024)





அமாரர் சிவத்திரு. கந்தையா பத்மநேசன் அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் (24-10-2024)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து ஒன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் ”மதி அச்சகத்தில்” அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 29ம் நாள் நிறைமதி அன்று (15-11-2024 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org